திருவள்ளுவராண்டு 2054 23.08.2023

# உலகத்தமிழ்

இதழ் ககூச (194)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்




சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்திய தோழி தினைப்புனம் மேயா யானைக்கும் கிளிக்கும்

நன்றி கூற விழைந்த நயத்தை விவரிக்கும் மதுரை மருதன் இளநாகனார்

நற்றிணைப் பாடல் எண் 194 (நூற்றுத் தொண்ணூற்று நான்கு);

துறைதோறும் தேரிய தூநெறியாளர் படைப்புகளைத் தேடித்தேர்ந்துக் கொணரும்

உலகத் தமிழிதழ் 194 (நூற்றுத் தொண்ணூற்று நான்கு).

# உள்ளடக்கம்


4 கொள்கை விளக்கக் குறிப்பு

5 நூலேணி

6 தமிழெழுச்சி

7 சுதந்திரத்திற்குப் பின் இந்தியா!

9 அவ்வப்போது

11 தேன்துளி

12 சேரமன்னர் வரலாறு

13 ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்!

14 தனித்தமிழ் மாட்சி

15 பொன்வண்டு

16 நற்றிணை—ஆங்கிலம்

# உள்ளடக்கம்

17 நினைவில் நிற்கும் நிகழ்ச்சி!

18 பதிகங்களைப் படியுங்கள்!

20 தொல்காப்பியம் காட்டும் பண்பாட்டு நெறிகள்!

22 இனிய இந்திய விடுதலை நாள் கொண்டாட்ட நல்வாழ்த்து!

23 வள்ளுவம்!

24 தமிழன்னை நான்மணிமாலை

25 Bharathan In Kamba Ramayanam

26 பூ மழை

30 எல்லாம் தமிழ்!

31 புகழ் வணக்கம்!

## இயல்–1

## தமிழ் வளர்ச்சித் துறை

### 1.3.4. மகாகவி பாரதியார் விருது

பாட்டுக்கொரு புலவராம் மகாகவி பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் படைப்புகளையும் பொதுமக்கள் உணர்ந்து பயன்பெறும் வகையில் தொண்டாற்றும் சிறந்த தமிழ்ப் பெருமக்களுக்கு, மகாகவி பாரதியார் விருது அளிக்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் விருது முனைவர் ஆ.இரா வேங்கடாசலபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 25 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.5.முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது

முத்தமிழ்க் காவலர் நெறியில், தமிழ்த் தொண்டாற்றும் தமிழ் அறிஞர் ஒருவர்க்கு. ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவவை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் முகமது மேத்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 21 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.6. பேரறிஞர் அண்ணா விருது

அல்லும் பகலும் அயராது உழைத்து. அருந்தமிழ்நாட்டை உயர்த்தி வளர்த்த பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்ச் சமுதாயம் எத்திக்கிலும்வளர்ச்சிபெற்றுத்தழைத்தோங்கவேண்டும் என்று தம் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டவர் ஆவார். அவரது சீரிய சிந்தனைச் செயலாக்கத்தைத் தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, மக்கள் நலப்பணியில் மக்களோடு இணைந்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.2.00இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது திரு.உபயதுல்லா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை 17 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## Chapter 1

## Tamil Development Department

### 1.3.4 Mahakavi Bharathiar Award

The Mahakavi Bharathiar Award is given to the best Tamil scholar who with his untired work, takes the great works of Bharathiar, including Poems and Essays to the benefit of common lot. This award carries a cash prize of Rs.2.00 lakh, one sovereign gold medal, citation and shawl. Mahakavi Bharatiyar Award was given to Dr. A.R.Venkata chalapathy for the year 2022. This award has been given to 25 scholars so far.

### 1.3.5. Muthamizh Kaavalar Ke.Aa.Pe. Viswanatham Award

This award is presented annually to the best Tamil scholar who serves continuously for the cause of Tamil, following the footprints of "Muthamizh Kaavalar". This award carries a cash prize of Rs.2.00 lakh, one sovereign gold medal, citation and shawl. Muthamizh Kaavalar Ke.Aa.Pe.Vishwanathan Award was presented to Dr.Muhammed Metha for the year 2022. So far, 21 scholars have been honoured with this award.

### 1.3.6. Perarignar Anna Award

Perarignar Anna worked day in and day out ceaselessly to uplift Tamilnadu and dreamt throughout his life that Tamil Society should grow and prosper in every walk of their life. This award is given to a social worker who has been working with the people for the betterment of the society by imbibing his thoughts and actions whole heartedly. This award carries cash prize of Rs.2.00 lakh, one sovereign Gold medal, citation and a shawl. Perarignar Anna award was presented to Mr. Ubayadullah for the year 2022.

So far, 17 scholars have been honored with this award.

*வளரும் . . . .*



# நூலேணி

30

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்




நூலின் பெயர் : அகலமும் ஆழமும்
நூலாசிரியர் : டாக்டர் ம.ரா.போ. குருசாமி
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 12 /-
பக்கங்கள் : 118
வெளியீட்டு எண்: 117




நூலின் பெயர் : மருந்து செய்முறைகள்
நூலாசிரியர் : தி. லலிதா
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 45 /-
பக்கங்கள் : 524
வெளியீட்டு எண் : 118




நூலின் பெயர் : செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்
நூலாசிரியர் : தி. நெ. வள்ளிநாயகம்
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 15/-
பக்கங்கள் : 166
வெளியீட்டு எண் : 119




நூலின் பெயர் : தமிழர் கூத்துகள்
நூலாசிரியர் : ஜாண் ஆசிர்வாதம்
பதிப்பாண்டு : 1985
விலை : ரூபாய் 25/-
பக்கங்கள் : 236
வெளியீட்டு எண்: 120

பேசு மிடைப் பொருளின் பின்னே மதிபோக்கிக்

கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதைவளர்க்கும்

விற்பனர்தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்,

மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்,

காரைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன். ...





ராமனெங்கே ராமன் அருளெங்கே சஞ்சீவி

மாமலையைத் தூக்குமொரு வல்லமைஎங் கேஇவற்றில்

கொஞ்சமும் உண்மை இருந்தால்நாம் கொத்தவரைப்

பிஞ்சுகள்போல் வாடிப் பிழைப்பதரி தாகி

அடிமையாய் வாழோமே ஆண்மைதான் இன்றி

# சுதந்திரத்திற்குப் பின் இந்தியா!

1947 சுதந்திரத்திற்குப் பின் 77 ஆண்டுகளாக நமது பாரதம் வெற்றிகரமான விடுதலை நாடாக இவ்வுலகில் தலை நிமிர்ந்து நிற்கிறது. குடியரசு என்ற கருத்தினை உலகிற்குத் தந்த கிரேக்க நாட்டிற்கு இன்று நாம் நன்றியினைத் தெரிவிப்பது அனைவரின் கடமையாகும். ஆனால் நம் நாட்டின் வேதங்களும் கிராமினி என்ற சொற் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் குடிமக்கள் தேர்ந்தெடுக்கும் தலைமையின் கீழ் வாழ்ந்ததாகச் சரித்திர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். டாக்டர் அம்பேத்கர் தன் நூலில் புத்தர் காலத்திலேயே கிரேக்கக் கருத்து போன்ற குடிமக்கள் தேர்வு செய்யும் தலைமை மற்றும் பல இனக் குழுக்களில் தலைமை அதிகாரிகளின் ஆட்சியில் பங்களிப்பு என்ற கருத்துடன், நீதி, நேர்மை, தர்மம் என்ற குறிக்கோளுடன் சங்கம் என்ற குழுவினைத் தொடங்கியிருந்ததையும் சரித்திரம் காட்டுகிறது. கருத்து வேறுபாடுகளைச் சட்டசபை போன்று ‘கனசங்க்’ என்ற சபைகளில் அமர்ந்து விவாதங்களையும் முரண்பாடுகளையும் பேசித் தீர்த்து வைத்துக் கொண்டதாக அம்பேத்கர் அவர்கள் எழுதியிருப்பதைப் படிக்கும் போது விடுதலை எண்ணமும் ஆட்சிமுறை நிருவாகமும் நம் நாட்டு மக்களின் மனத்திலேயே ஊறியிருந்திருப்பதை எண்ணி இறும்பூது எய்தலாம். சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் காட்டும் ஆட்சி முறையில் சமூகப் பொருளாதார நிலையின் சமத்துவத்திற்கான ஆரம்பக் கருத்துகள் எழுதப்பட்டுள்ளன. அதனை மௌரியர்கள் நடைமுறைப்படுத்த முயன்றதைப் போல் வள்ளுவர் காட்டும் அறமும் பொருளும் அன்றைய ஆட்சியர்கள் அறிந்து



வைத்திருந்தனர். குடியரசில் தனியொரு தலைவனுக்கே அதிக மக்களின் ஆதரவு தொடர்ந்து இருப்பது, பொதுவாக சர்வாதிகாரத்திற்கு வித்திடுவதிற்கும் வாய்ப்பு ஏற்படும் அபாயம் மறைந்துள்ளது என அன்றைய அரசியல் சட்ட சீரமைப்புப் பணியாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். குடியரசு, சுதந்திரம், விடுதலை என்பது நமது பெரும் பரிசுப் பொருளாக இருந்தாலும் அதை மிகவும் கவனமுடனும் அக்கறையுடனும் பாதுகாக்காவிடில், விடுதலை இழந்து சுதந்திரத்தைத் தொலைத்துவிடுவதற்கும் வாய்ப்பு உள்ளது என அன்றைய தலைவர்கள் வற்புறுத்தியிருப்பதை அனைவரும் உணர வேண்டும். சுதந்திரம் பெற்றதில் நாம் நம்மையே பாராட்டிக்கொள்வது ஒருபுறம் மகிழ்ச்சி தந்தாலும் நமது நாட்டுக் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், வேலைவாய்ப்பு, பெண்கள் குழந்தைகளின் பாதுகாப்பு, சமூக நீதியின் உறுதி, எல்லைப் பாதுகாப்பு, அறிவியல் வளர்ச்சி என அனைத்தையும் பாதுகாக்கும் பொறுப்பும் உள்ளது என்ற எச்சரிக்கையும் நினைவில் கொள்ள வேண்டும். சமீப காலமாக நாட்டிற்குள் நடக்கும் கலகங்களும் கலவரங்களும் சுதந்திர இந்தியாவின் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து வருபவை என்பதைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம். . . .*

## சுதந்திரத்திற்குப் பின் இந்தியா!

***முன்பக்கத் தொடர்ச்சி . . .***

பஞ்சாப், உத்திரப்பிரதேசம், டெல்லி மற்றும் வங்காளம் (1947), கல்கத்தா (1964), அஹமதாபாத் (1969), பிவண்டி (1970), டெல்லி (1976), அசாம் (1983), மறுபடியும் டெல்லி மற்றும் பிவண்டி (1984), மீரட் (1987), பகல்பூர் (1989), சோமநாதபுரம், அயோத்தி, மும்பை (1990 முதல் 1993 வரை), குஜராத் (2002), முசாபர் நகர் (2013), டெல்லி (2020), மணிப்பூர் மற்றும் குருகிராம் (2023) என வரிசையாக பல்வேறு வன்முறைக்கலவரங்கள் ஏற்பட்டு நம் நாட்டு மக்கள் பலரின் உயிரினை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. இவைகளுக்கு நடுவிலும் சோதனைகளைக் கடந்து சாதனைகளையும் நமது நாடு செய்து வருகின்றது. உலகக் கணிணிப் புரட்சியில், பாரதம் பெரும் பங்கு பெற்றிருந்ததும் பல இளைஞர்கள் தங்களின் விரல்நுனி விஞ்ஞான அறிவினால் அமெரிக்கா, சிங்கப்பூர், ஆசுதிரேலியா, கனடா எனப் பல நாடுகள் சென்று வளம் பெற்றது மட்டுமின்றி நம் நாட்டின் வெளிநாட்டு வரவு செலவில் பெரிய அளவில் சாதனை செய்துள்ளனர். இராணுவப் பாதுகாப்பில் ஏவுகணை முதல் விக்ரம் கப்பல் வரை விறுவிறுவெனத் தங்கள் தோள் பலத்தை உயர்த்தியுள்ளனர். ஆனாலும் ஜனத்தொகைக் கட்டுப்பாடு, வறுமையுற்றோர் அளவும் பஞ்சத்தில் அல்லலுறும் கணிசமான அளவு இன்னும் வளர வேண்டும். இந்த 77–ஆவது சுதந்திர தின அதிபர் முர்மு அவர்களின் உரையில் கூட நம் நாட்டின் சாதி, மத, இன வேற்றுமை,



கலவரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும், மணிப்பூர் கலவரம், ஹரியானாவில் நடந்த கொடூரங்கள் எனப் பெயர் கூறாமல் இவை போன்றவை ஒடுக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். உலகம் முழுவதும் பணவீக்கத்தினால் பின்னடைவு கண்ட சமயத்தில் கூட இந்தியா தன்னிறைவுப் பெற்று வெற்றிகரமாக வளர்ச்சிப் பெறுகிறது எனப் பாராட்டியுள்ளார். விண்வெளி சென்றுள்ள சந்திராயன் 3 மெதுவாக சந்திரனில் தடம் பதிக்கும் தருணம் தலை நிமிர்ந்து வான் புகழ் பெற பாரதம் தயார்நிலையில் உள்ளது. 1947 ஆகஸ்ட் 15இல் நம் நாடு விடுதலை பெற்ற பொழுது பிரிவினை நடந்ததனால் பல்லாயிரக்கணக்கானோர் இனக்கலவரங்களில் தங்கள் உயிர் நீத்த தியாகங்களை நம் பாரத பிரதமர், தன் சுதந்திர தின உரையில் நினைவு கூர்ந்தார் சென்னைக் கோட்டையில் நமது முதல்வர் கொடியேற்றித் தமிழகத்தின் பாரதம் சுதந்திரம் பெற போராடிய தியாகிகளையும் தலைவர்களையும் வாழ்த்திப்பேசினார்.

**”எங்கள் நாடும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு”** என்ற பாரதிதாசன் வரிகளை நினைவுகூர்ந்து தாய் மண்ணிற்குத் தமிழ் வணக்கம் தந்திடுவோம்.



**பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அன்னாரின் துணைவியார் திருமதி ந. பார்வதி அம்மாள் அவர்களிடம் நூலுரிமைத் தொகையான ரூ 10 இலட்சத்திற்கான காசோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் இன்று (14.08.2023) தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பேராசிரியர் மா நன்னன் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரின் துணைவியார் திருமதி ந.பார்வதி அம்மாள் அவர்களிடம் நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழறிஞர்களின் 173 நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 13.87 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுநாள்வரை சிலம்பொலி சு. செல்லப்பன், முனைவர் தொ. பரமசிவன், புலவர் இளங்குமரனார். திரு. முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம், புலவர் செ. இராசு, பேராசிரியர் க. அன்பழகன், முனைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு நெல்லை செ. திவான், திரு விடுதலை இராஜேந்திரன், திரு. நா. மம்மது, திரு நெல்லை கண்ணன், திரு கந்தர்வன் என்கிற நாகலிங்கம், திரு சோமலே, முனைவர் ந. இராசையா, தஞ்சை திரு. பிரகாஷ் ஆகிய 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் நூலுரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.07.2023 அன்று சென்னை, சர்.பிட்டி தியாகராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், நன்னன் அவருடைய நூற்றாண்டை கொண்டாடும் இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன், தமிழ்நாடு அரசு சார்பில் நன்னன் அவர்களுக்கு புகழ் சேர்கிற வகையில் நன்னன் அவர்களின் புத்தகங்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்னன் அவர்களின் குடும்பத்தினரோ. உறவினர்களோ, வேறு யாரும் கோரிக்கைகளை இந்த நேரத்தில் வைக்கவில்லை. யாரும் வைக்காமல் இந்த கோரிக்கையை நான் அறிவிக்கிறேன் என்று சொன்னால், நன்னன் குடியில் நானும் ஒருவன் என்ற அடிப்படையில், இந்த அறிவிப்பை செய்திருக்கிறேன்" என்று தெரிவித்தார்.




*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . .*



*முன் பக்கத் தொடர்ச்சி . . .*

அதற்கிணங்க பேராசிரியர் முனைவர் மா நன்னன் அவர்கள் எழுதிய நூல்கள். கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அவரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது துணைவியார் திருமதி ந பார்வதி அம்மாள் அவர்களுக்கு நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வழங்கி, சிறப்பித்தார்.

இந்நிகழ்வின்போது பேராசிரியர் முனைவர் மா நன்னன் அவர்களின் மகள் திருமதி அவ்வை அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வாசித்த கவிதை

முதலமைச்சரவர்களுக்கு உள்ளார்ந்த நன்றி
நன்னனுக்கு நூற்றாண்டு நிறைவு நிறை வாழ்வு
வாழ்ந்த நன்னனுக்கு நான் வந்து வாழ்த்துகிறேன்
என்று நிறைவான விழாவாக்கிய முதல்வரே

திராவிட உறவைச் சுட்டி பின்' தொடரும் உறவைச்
சொல்லி எம் தந்தையின் சிறப்பெல்லாம் அன்புடனே
தொடர்ந்து பேசிய சீர்மிகு செம்மலே

எழுதிய விரலுக்குக் கணையாழி அன்று
எழுத்துகளுக்கு நாட்டுடைமை ஆணை இன்று
எங்கும் பரவிப் பயன் விளைக்கும் என்று
எல்லார்க்கும் என்றே நிலைத்தது நன்று

நற்றமிழை என்றுமுளத் தமிழாகக் காக்க
நல்வழிகாட்டும் பெரியாரின் பெருநெறியை
நன்னன் முறையை நானிலத் துளோரெலாம் நன்கு
பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திட

நாட்டின் உடமையாய் நானிலத்தின் உடமையாய்
நூல்களை நன்னன் நூல்களை ஆக்கினீர்
நாடி வந்து கோராத போதும் தேடி வந்து
நற்செயல் புரிந்த மாண்பைப் போற்றுகிறோம்

நன்னன் குடியினர் நன்றி உணர்கிறோம்
நீவிர் நீடு வாழ்க எழு ஞாயிறாய் வாழ்க
நல்லாட்சித் தொடர நல்லோர் வாழ
நலமுடன் நீவிர் நீடு வாழ்க வாழ்க

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் தலைமைச் செயலாளர் திரு சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு இரா செல்வராஜ் இ.ஆ.ப தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஒளவை அருள், பேராசிரியர் முனைவர் மா நன்னன் அவர்களின் மகள்கள் திருமதி வேண்மாள். திருமதி அவ்வை மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.





## தேன்துளி — 1

விவேகானந்தர் அடிக்கடி இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தின் வடம் பிடிப்பதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள் என்றும், இளைஞர்களே உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்றும் இளைஞர்களுக்கு நம்பிக்கை ஒளியேற்றி அவர்களை பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் செயல்பட வழிகாட்டிக் கொண்டிருந்தார். நம்பிக்கை, நாணயம், ஊழலற்ற ஒழுங்கு, ஒருகாசும் பிறர் உழைப்பில் பெறாமை என்கிற இயல்புகள் அரும்புப் பருவத்திலேதான் மலர வேண்டும்.



## தேன்துளி — 2



சாதி ஒழித்தல் ஒன்று,
நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் மற்ற பாதி
துலங்குவதில்லை !!!

–பாவேந்தர் பாரதிதாசனார்



இவ்வாழ்த்துரையைக் கேட்ட குட்டுவன் பாலைக் கோதமனார்க்கு மிக்க பரிசில் நல்கிச் சிறப்பிக்க நினைத்தான். அவன் மனக்குறிப்பைக் கோதமனார் கண்டு கொண்டார். ஆயினும் அவரது உள்ளம் வேறொன்றை நாடிற்று. உடனே குட்டுவன் அவரை நோக்கிச் "சான்றீர், நீர் வேண்டுவதைக் கொண்மின்" என்றான். அவர் "வேந்தே, யான் இதுவரை நின்னோடே யிருந்து நீ தந்த பொருள்களால் செல்வ வாழ்வு பெற்றேன். இம்மை வாழ்வை இனிது கழித்த யான், மறுமையிலும் துறக்க இன்பம் பெற விழைகின்றேன்; அது குறித்து யான் என் பார்ப்பனியுடன் வேள்விகள் ஒரு பத்துச் செய்தல் வேண்டும்; அவ்வேள்விகட்கு வேண்டிய செல்வத்தை உதவுதல் வேண்டும் என்று தெரிவித்தார். அவருடைய உள்ளத்தின் உயர்வு கண்டு உவகை மிகுந்து, அவர் வேண்டியவாறே குட்டுவன், வேள்விகட்கு வேண்டும் பலவும் உவந்து அளித்தான். கோதமனாரும் இடையீடின்றி ஒன்பது வேள்விகளை முடித்துப் பத்தாம் வேள்வி நடைபெறுகையில் தன் பார்ப்பனியுடன் மறைந்து விட்டார்.

தன்னோடு துணைவராய் இருந்த நெடும் பாரதாயனார் துறவு பூண்டதும், கோதமனார் வேள்விக் காலத்தில் மறைந்ததும், குட்டுவன் உள்ளத்தில் நன்கு பதிந்து துறக்க வாழ்வில் அவனுக்குப் பெருவேட்கையை உண்டு பண்ணிவிட்டன. அரசியற் செல்வத்திலும், மறம் வீங்கு புகழிலும் அவனுக்கு உவர்ப்புப் பிறந்தன. அதன் மேல் அவனுக்கு மகப்பேறும் இல்லாதிருந்தது. அஃது, அவன் கருத்தை மேன்மேலும் ஊக்கவே, அவன் தானும் துறவு மேற்கொள்ளத் துணிந்து சான்றோர் சிலர் துணை செய்யத் தன் மனைவியுடன் துறவு பூண்டு காடு சென்று சேர்ந்தான்.

## 7. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குப் பதுமன் தேவி, சோழன் மணக்கிள்ளி என இரு மனைவியர் இருந்தனர். அவருள் பதுமன் தேவியென்பவள், வேணாட்டு வேளிர் குடியில் தோன்றியவள். அவள் தந்தை வேளாவிக்கோமான் எனப்படுவன். மணக்கிள்ளி சோழர்குலப் பெண். பதுமன் தேவியென்ற இப்பெயரைக் கண்டோர், இவள் பதுமன் என்பவனுக்கு மனைவியென்று பொருள் கொண்டு இப்பதுமன்தேவி இமயவரம்பனுக்கு உடன்பிறந்தவள் எனக் கருதி இவள் மகனான நார்முடிச்சேரல் மருமக்கள் தாய முறையில் அரசு கட்டில் ஏறினான் என்று கூறிவிட்டனர். அஃது வரலாற்று உண்மையன்று.

இனி, அவ்வரலாற்று உண்மையைக் காண்பது முறையாகிறது. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு, தமிழ்நாட்டில் பேரரசு நிறுவி வாழ்ந்த சோழ வேந்தரின் மனைவியர் பெயர்களைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. அவர்கள், வானவன் மாதேவி என்றும், பஞ்சவன் மாதேவி என்றும், செம்பியன் மாதேவி என்றும், சேரவன் மாதேவி என்றும் பெயர் தாங்கியிருந்தனர். வானவன் மாதேவியார் இரண்டாம் பராந்தகனுக்கு மனைவி; பஞ்சவன் மாதேவி என்பது உத்தம சோழன் மனைவியது பெயர். செம்பியன் மாதேவியார் முதற் கண்டராதித்த சோழருடைய மனைவியாராவர். இவ்வாறே வில்லவன் மாதேவி, பாண்டிமாதேவி, சேரன்மாதேவி என்ற பெயருடைய அரசியர் பலர் இருந்துள்ளனர். இப்பெயர்களைப் போலவே, பண்டை நாளைத் தமிழ்ச்சேர மன்னர் மனைவியரும் பெயர் பூண்டிருந்தனர். அதனால் அவர்கள் பெயரை இச்சோழவேந்தர் மனைவியர் பெயர்போலக் கொல்வது நேர்மையேயன்றி வேறாகக் கொண்டு, இயைபில்லாத, மிகவும் பிற்காலத்தே நுழைந்த மருமக்கள் தாய்த முறையைக் கொணர்ந்து புகுத்திக் குழறுபடை செய்வது உண்மையாராய்ச்சி ஆகாது.

குட நாட்டை இமயவரம்பனும், குட்ட நாட்டைப் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் ஆட்சி புரிந்து வருகையில், இளையனான நார்முடிச்சேரல், வேணாட்டிற்கு வட கிழக்கிலும், குட்ட நாட்டிற்குத் தென்கிழக்கிலும், பாண்டி நாட்டைச் சாரவும் இருந்த குன்ற நாட்டில் இருந்து நாடுகாவல் செய்துவந்தான். இப்போது அது குன்றத்தூர் நாடு என வழங்குகிறது. அப்பகுதியில் வண்டன் என்னும் பழையோன் வழிவந்தோரும் முதியர் இனத்தவரும் வாழ்ந்து வந்தனர். அவர்கட்குத் தலைவனாய், அவரது பேரன்புக்கு உரியனாய் நார்முடிச்சேரல் இருந்து வந்தான். குன்ற நாட்டுக்கு மேற்கிலும் வடமேற்கிலும் உள்ள குட்டநாட்டையும், குட்டநாட்டின் கிழக்கிலுள்ள பூழி நாட்டையும் குட்டுவன் ஆட்சி செய்து வந்தான். பாலைக் கோதமனார் நெடும்பாரதாயனார் முதலிய சான்றோருடன் கூடிச் செல்கெழு குட்டுவன் துறவுள்ளம் கொண்டு அறவேள்வித் துறைகளில் மிக்க ஈடுபாடு உடையனாகியபோது, நார்முடிச்சேரல் பூழி நாட்டுக்குக் கிழக்கில் இருக்கும் மலைநாட்டைத் தன் ஆட்சியிற்கொண்டு நாடு காவல் புரிந்தொழுகினான்.

*வளரும் . . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் – வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

131

## அமெரிக்கா ஆக்கிய ஆங்கில அகராதி
## The American Dictionary

பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலத் திருக்கோயில்களின் ( Church of England ) கிரியை முறைகளில் மேலும் பல மாற்றங்கள் வேண்டுமென்று கிறித்தவர்களிற் சிலர் கிளர்ச்சி செய்தார்கள். இந்தச் சீர்திருத்தக் கிளர்ச்சியை முதலாம் எலிசபெத் அரசியார் விரும்பவில்லை. கிளர்ச்சி செய்தோரை அவர் கடுமையாகத் தண்டித்தார். இந்தக் கிளர்ச்சியாளர்களைக் கடும்போக்குத் தூயர்கள் ( Puritans ) என்று குறிசுட்டார்கள். தண்டனைக்கு உட்பட விரும்பாத கடும்போக்குத் தூயர்கள் இங்கிலாந்தை விட்டு வெளியேறத் தொடங்கினார்கள். இவ்வாறு, பிறந்த நாட்டில் வாழ முடியாமலும், புதிய உலகத்தில் புதுவாழ்வு தேடியும் புறப்பட்டவர்கள்தாம் இன்றைய அமெரிக்கர்கள். புதுவாழ்வு தேடிப் போனவர்கள் ஆங்கிலேயர் மட்டுமல்லர். ஸ்ப்பானியர், இடச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், யேர்மானியர், சுவீடன் நாட்டினர் என்று பலரும் புறப்பட்டுப் போனார்கள்.

இங்கிலாந்தின் அரசியாயிருந்த முதலாம் எலிசபெத்தின் கெடுபிடியைப் பொறுக்கமுடியாத கடும்போக்குத் துயர்கள் நூறுபேர், வேறுநாட்டில் நல்வாழ்வு கிட்டும் என்று நம்பி, 1620 ஆம் ஆண்டில் " மேபிளவர் " ( Mayflower ) என்ற கப்பலில் ஏறினார்கள். யாத்திரிகத் தந்தையர் ( Pilgrims Fathers ) என்று வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட்ட இவர்கள், பலநாட் பயணம் செய்து, அமரிக்காவில் பிளிமத் ( Plymouth ) என்ற இடத்தில் கரைதட்டினார்கள். இவர்களைத் தொடர்ந்து, வேறும் பலர் புத்துலகம் காணப் புறப்பட்டுக் கடலோடினார்கள். அவர்கள் அமரிக்காவில் பிளிமத், மசாச்சுசெற் ( Massachusett ) ஆகிய இடங்களில் குடியேறினார்கள்.

1620 ஆம் ஆண்டில் அமரிக்காவுக்குப் போன ஆங்கிலேயர்,1733 ஆம் ஆண்டளவில் பதின்மூன்று பிரதேசங்களைத் தமக்குரியதாக ஆக்கிக் கொண்டார்கள். இந்தப் பிரதேசங்களில் குடியேறியவர்களில் பெரும்பாலானவர்கள் முதலாம் எலிசபெத்தின் வெறுப்புக்குள்ளாகி நாட்டைவிட்டுக் கிளம்பியவர்கள்தாம். இவர்கள் தாம் குடியேறிய பிரதேசங்களில் பெருந்தோட்டங்களை ( Plantations ) ஏற்படுத்தி, அந்தத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆப்பிரிக்க மக்களை அடிமைகளாக்கி அழைத்து வந்தார்கள். அவர்களின் உழைப்பால் நாடு வளம் கொழித்தது.

வழங்கொழித்த குடியேற்றப் பிரதேசங்களில் வாழ்ந்தோர் வரிசெலுத்த வேண்டும் என்று இங்கிலாந்தின் பாராளுமன்றம் சட்டமியற்றியது. இந்தச் சட்டத்தைக் குடியேற்ற நாட்டு ஆங்கிலேய மக்கள் எதிர்த்தார்கள். பிரித்தானிய அரசு, இராணுவ பலத்தைக் காட்டியது. குடியேற்ற நாட்டு மக்கள் அமரிக்காவில் இருந்த பிரெஞ்சுக்காரர், ஸ்ப்பானியர், இடச்சுக்காரர் ஆகியோரின் துணையை நாடினார்கள் போர் வெடித்தது. பிரித்தானியப் படையினர் தோல்வியைத் தழுவினர். வெற்றி பெற்ற அமரிக்காவின் குடியேற்ற மக்கள், தம் நாட்டை ஐக்கிய அமெரிக்க அரசுகள் ( United States of America ) என்று 1776 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் திகதி பிரகடனப்படுத்தினார்கள். பிரித்தானியா இந்தப் பிரகடனத்தை ஏற்க மறுத்து இழுத்தடித்தது. ஏழாண்டுகள் இழு பறிப்பட்ட பின்னர், 1783 ஆம் ஆண்டு, வேறுவழியின்றி, அமெரிக்கர்களின் இறைமையைப் பிரித்தானியா அங்கீகரித்தது. இந்த ஆறாண்டுப் போரை அமெரிக்கச் சுதந்திரப் போர் ( American War of Inde-pendence ) என்று வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு அமெரிக்காவில் குடியேறிய பரம்பரையில் வந்தவர்தான் நோவா வெப்ஸ்ரர் ( Noah Webster ) என்ற அகராதி அறிஞர். இவர் 1758 ஆம் ஆண்டு பிறந்தார். 1620 ஆம் ஆண்டு யாத்திரிகத் தந்தையர்கள் என்ற பெயரில் Mayflower என்ற கப்பலில் அமரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று பிளிமத் என்ற இடத்தில் குடியமர்ந்த William Bradford என்பவரின் பரம்பரையில் வந்தவர் என்ற பெருமையும் வெப்ஸ்ரருக்கு உண்டு.

அமெரிக்கச் சுதந்திரப் போர் நடந்துகொண்டிருந்தபோது Webster அவர்கள், Yale என்ற பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். பிரித்தானியாவுக்கு எதிரான போரின்போது பிரித்தானியரை எதிர்த்த Connecticut Militia என்ற சண்டைக்காரப் படையில் சேர்ந்து போரிட்ட பெருமையும் இந்தப் பல்கலைக்கழக மாணவனுக்கு உண்டு. பட்டம் பெற்றபின்னர், இவர் சிலகாலம் பாலர் பாடசாலைகளில் கற்பித்தார். கற்பித்தல் தொழிலில் நாட்டம் குறைந்ததும், சட்டக் கல்லூரியில் சோந்து சட்டம் பயின்றார். சட்டத்தொழிலும் கசந்தது. கல்வித்துறையில் இருந்து சமூகச்சீர்திருத்தம் செய்யலாம் என்று நம்பி, மீண்டும் கல்வித் துறைக்கு வந்தார். பல பாடசாலைகளை நிறுவுவதில் வெற்றிகண்ட அவர், ஆங்கில மொழிக்கான இலக்கணநூல்கள் பலவற்றை எழுதினார். " A Grammatical Institute of the English Language " என்ற தலைப்பில், அவர் படிமுறையிலான மூன்று புத்தகங்களை எழுதினார். இவை 1783, 1784, 1785 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இந்த நூல்களில் ஆங்கில உச்சரிப்பு, ஆங்கில இலக்கணம், ஆங்கில எழுத்துக்கூட்டல் ஆகியவற்றிலிருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை ஒருசீர்மைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கிக்காட்டினார்.

*வளரும் . . . .*





மறைமலையடிகள்

## 6.கல்வியே அழியாச் செல்வம் . . .

அறிவுநூற்கல்வி யுடையார்க்கு நிகழும் அறிவும் முயற்சியும் அத்தகைய அல்லல்களை வருவியாமல் மேன்மேல் உள்ளக் கிளர்ச்சியினைத் தருவனவாய் இருத்தலின், அவரது அறிவு பெருவிளக்கம் உடையதாய், அவர் துய்க்கும் எவ்வகை யின்பங்களையும் மிகவுங் கூர்மையாய்த் துய்த்தற்குரிய வழிதுறைகளைக் காட்டி அவரை எக்காலும் பெருமகிழ்ச்சியில் தோய்ந்திருக்கச்செய்யும்.

இனிய ஓசையையேனும் அழகிய காட்சிகளையேனுந் தீஞ்சுவை உணவையேனும் நலஞ்சிறந்த வேறு பிறவற்றையேனும் இவ் விருதிறத்தாரும் ஒருகாலத்து ஒருங்கே துய்க்கும்போது, அறிவுநூற்கல்வி யுடையார் அவற்றின் நுணுக்கங்களை நிரம்பத் தெரிந்து மிக மகிழ்தலும், உலகநூற்கல்வியுடையார் அவற்றை அங்ஙனம் உணரமாட்டாமையின் அவர் சிறிதே மகிழ்நலுங் கண்கூடாய்க் கண்டறியலாம்.

மேலும், அறிவுநூற்கல்வி யுடையார் பெரிதுங் கூர்மையான அறிவுடையராதலின், அவர் நாம் விரும்பினால் நம்மினுந் தாழ்ந்த உலகநூற்கல்வி யுடையார் செய்யும் எந்திற முயற்சிகளையும் அவரைவிட எளிதாகவுஞ் செவ்விதாகவுஞ் செய்து முடிக்கமாட்டுவர். உலகநூற் கல்வி யுடையாரோ நாம் எத்துதணதான் விரும்பினாலும் . தம்மினும் மேற்பட்ட அறிவுநூற்கல்வியார்க்குள்ள அறிவைப் பெறவானது அவர் செய்யும் முயற்சிகளிற் றிவையாவேலுந் தாஞ் செய்யவாவது மாட்டுவாரல்லர்.

எதுபோல வெனின், அரசியலை திறம்பட நடத்தும் மேலோனான ஓர் அமைச்சன் தன்கீழ் அலுவல் பார்ப்பார் செய்யும் முயற்சிகளைத் தான் செய்யவேண்டினால் அவரினும் அதனைத் திறமையாக செய்து முடிப்பன்.அவன் கீழுள்ள ஊர்காவற்காரன் ஒருவன் அவ்வமைச்சன் தொழிலைத் தான் செய்ய விரும்பினால் அது முடியுமோ ? அதுபோலவெனற்றிந்து கொள்ளல் வேண்டும். அதுவல்லாமலும், எல்லா உயர்ந்த பொருள்களும், உயர்ந்தோரும், உயர்ந்த இனப்பங்குகளுந் தமக்கு இசையாத உலகநூலறினி முயற்சியுடையாரை விட்டகன்று. நமக்கு இசைந்த அறிவுநூலறிவு மகநற்கல்வியிலேயே தமது காலத்தை முற்றும் விடையும் மிக முயன்று பெற்று விவாக்கிக்காட்டுதும்.

உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் சிறியவாயிருப்பினும் பெரியவாய் இருப்பினும் அவை தம்மை உற்றுநோக்கி யாராய்ந்தவர்களே அறிவிற் பெரியராகிப், பல அரும்பெரும் புதுமைகளை கண்டறிந்து, நம்மனோர்க்கெல்லாம் அனப்பில நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் . எதனையும் உற்றுநோக்கி ஆராய்தவின்றி,ஆடு மாடுகளைப்போற் நாக்காய்ச் சென்றவர்கள் தாமும் அறிவு விளங்கப் பெற்றதில்லை.

பிறர்க்கும் நன்மையாவன செய்ததில்லை. சோற்றுக்குக் கேடும் மண்ணுக்குப் பொறையுமாய் இருந்து அவர்கள் தம் வாழ்நாளை உண்டு உடுத்துறங்கிக் கழித்தவர்களேயாவர். இலந்தை மரத்திலிருந்து நன்றாய்ப் பழுத்த பழங்கள் உதிர்ந்து கீழ் விழுதலை எத்தனைகோடி மக்கள் முற்காலத்தும் பிற்காலத்தும் பார்த்திருக்கின்றார்கள் !

அவர்களுள் எத்தனைபேர் அவைகள் ஏன் அங்களங் கீழ்விழுகின்றன என்று ஆராய்ந்து பார்த்தவர்கள் ? நியூட்டன் என்னும் ஒருவரைத்தவிர ஏனைக் கோடி கோடியான மக்கள் எவரும் அதன் உண்மையை அறியவில்லையே மற்றையோர்க்கு இல்லாது போனமையான்றோ ?

*வளரும் . . . .*



# பொன்வண்டு

எட்கர் அல்லன் போ

பெ நா அப்புஸ்வாமி மொழிபெயர்த்தது

13

ஒருநாளும் அங்கு மனிதன் அடியெடுத்து வைத்ததாகவும் தோன்றவில்லை. லெகிராந்து தயக்கமே இல்லாமல், வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றான். இரண்டொரு இடங்களில் மட்டும், வழி தெரிந்து கொள்வதற்காகத்தான் தான் முன்னால் இட்டிருந்த சிற்சில அடையாளங்களைக் கவனித்துப் பார்க்க ஒரு கண நேரம் நின்றான்.




இப்படிச் சுமார் இரண்டு மணி நேரம் நாங்கள் நடந்தோம். சூரியன் மலைவாயில் விழும் தருணத்தில் மிகவும் பாழடைந்த ஓர் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். அது ஒருவரும் எளிதில் ஏற முடியாத மலைஉச்சியில் அருகிலுள்ள ஒரு மேட்டிடம், அடி முதல் உச்சி வரையில், அதில் மரங்கள் காடுபோல் நெருங்கி வளர்ந்திருந்தன. இடையிடையே ,இங்கு மட்டும், பெரும் பாறைகள் மண்ணில் பதியாமல், தரையின் மேலே படுத்துக்கிடந்தன. சில பாறைகள் அங்குள்ள மரங்களின் மீது சற்றே சாய்ந்திருந்தன. அந்த மரங்கள் தங்கியதால் மட்டுமே அந்தப் பாறைகள் ஒட்டிக்கொண்டு அங்கு நின்றனவே தவிர, அவைகளின் சிறுபிடிப்பு இல்லாவிட்டால், கீழே வெகு தொலைவிலுள்ள பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்திருக்கும். நாலாபக்கமும் மிகவும் அழகான மலைப்பிளவுகள் காணப்பட்டன. ஏற்கனவே பயங்கரமாயிருந்த அந்த இடத்தின் கோரத்தை அவை பன்மடங்கு பெருக்கின.

நாங்கள் தங்கிப் பொத்தி அரும்பாடுபட்டு, ஏறி வந்து சேர்ந்த இடம் ஓர் இயற்கையான வடம்போல் அமர்ந்திருந்தது. அங்கு முட்செடிகள் செறிந்து, நெருங்கி அடர்த்தியாய் வளர்ந்திருந்தன. அரிவாளை எடுத்துச் சென்றிராவிட்டால், அவற்றின் ஊடாகப் புகுந்து சென்றிருக்கவே முடியாது. அரிவாளைக் கொணர்ந்தது எதற்கு என்பது அப்பொழுது தான் எனக்குத் தெரிந்தது. அரிவாளை ஏந்திய ஜுபிடர், தன் எஜமான் உத்தரவுப்படி, அங்கு மிகவும் ஓங்கி உயர்ந்து நின்ற ஒரு காட்டுப் பூவரசி மரத்தை நோக்கி வழியே வெட்டிக்கொண்டே முன்னால் சென்றான். அந்த மரத்தின் அருகில் எட்டுப் பத்துக் கருவாலி மரங்களும் அங்குள்ள ஒரு சமதளத்தில் ஒன்றாக நின்றன. அந்தக் காட்டுப் பூவரசு மரம் மட்டும், தளதள என்று செழித்திருந்த அதன் இலைகளின் அழகாலும், நாலா பக்கமும் வீசிப் பரந்திருந்த அதன் கிளைகளாலும், அதன் வடிவத்தாலும், அதன் கம்பீரத் தோற்றத்தாலும், அங்குள்ள மரங்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிற்று. நான் அன்று வரை அதைப்போன்ற மரத்தை கண்டதில்லை.

அதன் அடியில் நாங்கள் போய்ச் சேர்ந்ததும், லெகிராந்து ஜூபிடரை நோக்கி, உன்னால் இந்த மரத்தின் மேல் ஏற முடியுமா ? பார் என்று கேட்டான். அந்தக் கேள்வி காதில் பட்டவுடன் அந்தக்கிழவன் அயர்ந்து போனான். சற்று நேரம் அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பின்பு ,அந்தப் பெரிய மரத்தூரின் அருகே சென்றான். அதைச் சுற்றி மெதுவாக நடந்தான். அதை மேலும் கீழும் ,நுட்பமாய்க் கவனித்தான். பலமுறை நுணுகிப் பார்த்த பிறகு.' முடியும் எசமான். கண்ணிலே கண்ட எந்த மரத்தையும், ஆயுசுள்ள மட்டும் ஜுப் ஏறும் என்றான்.

அப்படியானால் சீக்கிரம் ஏறு. இன்னும் சற்று நேரத்தில் இருட்டி விடும். நாம் செய்வது ஒன்றுமே அப்புறம் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடும். ஜல்தி ..

'எவ்வளவு உயரம் ஏற வேண்டும், எசமான் ? என்று கேட்டான் ஜூபிடர். முதலில் அடிமரத்தை ஏறி முடி, அதன்பிறகு எங்கே போகவேண்டும் என்று சொல்லுகிறேன். இந்தா, நில். இந்த வண்டையும் எடுத்துக் கொண்டு போ ...

'வண்டையா ? எசமான் .....பொன்வண்டையா ? என்றான் அந்த நீகிரோவன் பயந்த குரலில் .அவ்வாறே செய்யச் சற்றே பின்வாங்கினான்." அந்த வண்டையும் ஏன் தூக்கிக்கொண்டு ஏறவேண்டும் ? செத்தாலும் அது முடியாது என்று மறுத்தான்.

'தடி போல் ஒரு ஆண்மகன் இவ்வளவு பயங்கொள்ளியாக இருப்பான் என்று நான் நினைக்கவே இல்லை. இது ஒரு சிறு வண்டு. செத்து போனது, உயிரில்லாதது. இதனால் ஒரு கெடுதலும் செய்யமுடியாது. இந்தா வண்டை நீ தொடவேண்டாம். இந்தக் கயிற்றைப் பிடித்துக்கொள். கயிற்றில் இது தொங்கட்டும். அப்படித் தூக்கிக்கொண்டு போனால் போதும். எப்படியானாலும் இந்த உயரம் தூக்கிக்கொண்டு போகவேண்டும். இல்லையானால் இந்தச் சளகுப்பாரையால் உன் மண்டையைப் பிளக்கவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுவிடும்.

*வளரும் . . . . .*



# நற்றிணை— ஆங்கிலம் !


பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்

சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு


154

## நற்றிணை—132

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய
தலைவிக்குத் தோழி சொல்லியது

### நெய்தல்

பேர் ஊர் துஞ்சும் யாரும் இல்லை

திருந்து வாய்ச் சுறவம் நீர் கான்று ஒய்யெனப்

பெருந் தெரு உதிர்தரு பெயலுறு தண் வளி

போர் அமை கதவப் புரை தொறும் தூவ

கூர் எயிற்று எகினம் நடுங்கும் நல் நகர்ப்

பயில்படை நிவந்த பல் பூஞ் சேக்கை

அயலும் மாண் சிறையதுவே அதன்தலை

காப்புடை வாயில் போற்று ஓ என்னும்

யாமம் கொள்பவர் நெடு நா ஒண் மணி

ஒன்று எறி பாணியின் இரட்டும்

இன்றுகொல் அளியேன் பொன்றும் நாளே

## Narrinai — 132

**SHE SPEAKS**

### NEIDHAL

City sleeps; none awake!

Shark flips its stomach out

to vapour up for downpour;

Storm! Thru' shut door-slit

chill drops fizz; bandog shivers.

In gloam from mansion

floral cubicle-casement

are seen sentinels on duty!

Warders' holler and whoop with gong

of bells buzz in beats; can't reach Lord!

Would I end right now, oof?

***To Continue...***



# பெருமைக்குரிய குழந்தைக் கவிஞர்!

முனைவர் தேவி நாச்சியப்பன்

162

'ஆச்சி வந்தாச்சு' இதழின் துணை ஆசிரியர், திரைப்பட விமர்சகர் திரு. எல். சுந்தரம் அவர்கள் 15.04.2002 ல் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரை.

## பெருமைக்குரிய குழந்தைக் கவிஞர்!



குழந்தைக் கவிஞர் ஓர் எடுத்துக்காட்டான மனிதர். அவர்களது எளிமை; குழந்தை உள்ளம்; சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடின்றிப் பழகிய பண்பு; மனம் திறந்த பேச்சு ஆகிய எல்லாமே என்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கும்.

நான் "நகரத்தார் குர"லில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய போது முனைவர் திரு.வ. தேனப்பன், குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா அவர்களைப் பேட்டி கண்டு கட்டுரை அனுப்பியிருந்தார். அதை நவம்பர் 1982 இதழில் வெளியிட்டிருந்தேன். அதைப் பார்த்த பின் குழந்தைக் கவிஞர் முதன்முதலாக நன்றி தெரிவித்து எனக்குக் கடிதம் எழுதி இருந்தார்கள்.

என் புதல்வன் தங்கமணியின் திருமண விழாவில் கலந்துகொண்டு வாழ்த்திப் பேச வருமாறு அழைத்து இருந்தேன். அதுபோல அவர்கள் பல முக்கிய பணிகளுக்கு இடையே 3. 2. 1989 அன்று கவிஞர் திரு. பொன்ராசனுடன் நடராஜபுரம் வந்து திருமண விழாவில் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசியதை என்றுமே மறக்க முடியாது. 'தங்கமணி– மணிமேகலை' என்ற பெயர்ப் பொருத்தம் எல்லோருக்கும் அமைந்து விடாது என்றும் மணியில் முடிந்து மணியில் தொடங்கும் அது அந்தாதி போல் உள்ளது என்றும் அப்போது அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முக்கிய செய்திகள் இருக்கும்போதும், அவ்வப்போது பாராட்டுப் பெறும் போதும் எனக்குக் கடிதங்கள் எழுதுவார்கள். நானும் பதில் எழுதுவேன். இதுவரை அவர்கள் சுமாராக 50 கடிதங்கள் எழுதி இருப்பார்கள். அவற்றைப் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

அவர்களது எழுத்தாற்றலைக் கண்டு வியந்த நான் அவர்கள் பழகிய முக்கியப் புள்ளிகளைப் பற்றியும் கவிஞர்கள், அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் எழுதியனுப்புமாறு கேட்டுக் கொண்டேன்.

பல்வேறு பணிகளுக்கு இடையே அவர்களும் சக்தி வை. கோவிந்தன், ஏ.வி. மெய்யப்ப செட்டியார், கவியரசு கண்ணதாசன் ஆகியோரைப் பற்றி எழுதி அனுப்பினார்கள். அவற்றை நானும் "நகரத்தார் குர"லில் வெளியிட்டேன். திரு. ஏ. கே. செட்டியாரைப் பற்றியும் கம்பன் அடிப்பொடி பற்றியும் தொடர்ந்து எழுதுவதாக இருந்தார்கள். ஆனாலும் வேலைப்பளு அவர்களை எழுத விடாமல் செய்துவிட்டது.

மதுரைக்கு வந்திருந்த போது அவர்கள் என்னை அலுவலகத்தில் இரண்டு மூன்று முறை சந்தித்தார்கள். "அன்னை மீனாட்சியை தரிசிக்க வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்." என்று ஒரு முறை கூறி, முனைவர் திரு.பூவண்ணன் எழுதிய "குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வரலாறு" என்ற நூலை அன்பளிப்பாக வழங்கிச் சென்றார்கள். இந்த நூல் எனக்குப் பல வகையிலும் உதவியாக இருந்தது;இருந்து வருகிறது.

"கோகுலம்" இதழில் வெளியிட ஏ.கே. செட்டியாரின் படத்தையும் சில செய்திகளையும் அவர்கள் கேட்டிருந்தார்கள். அவற்றை உடனடியாகத் தேடிப் பிடித்து அனுப்பினேன். அதற்கு அவர்கள் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். தன் துணைவியார் திருமதி வள்ளியம்மை ஆச்சிக்கு மணிவிழாக் கொண்டாடி மற்றவர்களுக்கு வழி காட்டினார்கள்.

**கவிதைகள் போல நிறையக் கடிதங்களும் எழுதி மனம் கவர்ந்தவர்.**





செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

171

## பன்னிரண்டாம் திருமுறை

### சேக்கிழார் – பெரிய புராணம்—3

கடவுள் வாழ்த்தின் முதல் பத்துப்பாடலும் இப்புராணத்தின் பாயிரமாகவும் முன்னுரையாகவும் அமைந்திருப்பது ஒரு சிறப்பு. எடுக்கும் மாக்கதை, இன்தமிழ் செய்யுளாய் நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திட வேண்டும் என இறைவனை முதலில் வேண்டுகிறார் சடைமுடி கங்கையாரை, மாதொரு பாகனை, மன்மதனை நெற்றிக்கண்ணால் சுட்டெரித்த சுடர்க்கொழுந்தை, துதிசெய்யும் நாயன்மார் பற்றி நம் எடுத்துரைப்பு அரிது ஆயினும் என் ஆசை அளவின்றியிருப்பதால் அவர்களின் தொண்டனைத்தையும் உலகில் பரப்ப நான் விழைகின்றேன். அரும்பெருமைத் திருத்தொண்டர் தம் அளவற்ற சீரனைத்தையும் இப்புராணத்தில் புகலுற்றேன். என் முயற்சி சிறிதாயினும் ''மெய்ப்பொருள் உரியார் கொள்வர் மேன்மையால்'' என நம்புவதாகவும் பணிவுடன் இந்த அளப்பரியப் பணியைச் செய்து முடித்துள்ளார். தூய பொன்னணிச்சோழன் நீடுஊழிபார்ஆய சீர் அநபாயன் அரசவையில் அரங்கேற்ற ஆண்டவன் துணைபுரிவார் என்று அழகாகப் பாடியுள்ளார். சிவனடியார்களின் அருட்திருத்தொண்டினை அகிலம் முழுவதும் அறிய வேண்டும் அதனால் அவர்களின் திருநாமம் நெஞ்சில் அகிலந்தோர் அறிகையில் அவர்களின் அகத்திருள் மறையும் புற இருள்போக்குகின்ற செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என நம்புகின்றார். நம் சேக்கிழார் மூலம், பக்தி என்பது, தான் – இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உண்ர்வேயாம் எனவே அது உண்மைச் சமயத்தின் உயிர் நாடியாகும். சமய வாழ்வு என்பதன் உள்ளீடும் வடிவம் தொண்டர்கள் தம் உயிர்க்கிடையாக இருப்பதை இப்புராணம் வெளிப்படுத்துவதைக் காணலாம். கடவுள் ஒரு தத்துவப்பொருளாக இராமல் அனுபவமாக மாறிவிடுகிறது எனப் பிரிங்கில் பேடிசன் என்ற அறிஞர் எடுத்துரைத்துள்ளார். இறைப்பொருள் மனத்தால் எண்ணப்படுவதாகவோ கற்பனையில் காண்பதாகவோ இல்லாமல் அனுபவப்பொருளாக இருந்ததை இவர்களின் கதை நமக்கு உணர்த்தும் எனச் சேக்கிழார் இத்திருத்தொண்டர்புராணத்தில் புரிய வைத்திருப்பார். தொண்டர்கள் தங்கள் அகத்தில் இருக்கும் ஆற்றலை நம்பி வாழ்வதால் அற்புதங்கள் நிகழ்வதற்கு அஞ்சுவதேயில்லை. நம்பிக்கையால் பிறர் நோய் தீர்ப்பதும் குறைகளாவதும் உயிர் நீங்கிய உடலுக்கு உயிர்த்திரும்பப் பெற செய்தலையும் ''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே'' என்பது மணிவாசகம்



உ.வே.சா. அவர்கள் தன் 'சைவமும் தமிழும்' என்ற கட்டுரையில் நாயன்மார்கள் தம் திறத்தில் சிவபெருமான் செய்த அருட்செயல்கள் பல, அவர்களுள் சைவ சமய ஆசாரியர்களாகிய நால்வரும் தம்முடைய தமிழ்ப்பாடல்களால் சிவனது பெருமையை வெளியிட்டார்கள். அவர்களுடைய பாடல்கள் மந்திரங்களைப்போல ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றிருந்தன. (17.09.1936 புதுக்கோட்டை பிரசங்கம்) தொண்டர்களுக்கான சிவன் நிலத்திற்கு வந்து நாயன்மார்களை ஆட்கொண்டதை அழகுபட மொழிந்திருப்பார் சேக்கிழார். பெரியபுராணத்தைத் தொடங்கியுள்ளார்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . . .*





செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

## சேக்கிழார் – பெரிய புராணம்

*முன்பக்கத் தொடர்ச்சி . . .*



சுந்தரருக்கு அவர் வந்ததையும் திருமணத்தைத் தடுத்தாட்கொண்டதையும் அறியும் போது படிப்பவர் வியப்பெய்துவர். சேக்கிழாருக்கு உலகெலாம் என அடியெடுத்து கொடுத்தது போன்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகையைப் பாடத்தொடங்கிய போது இறைவன் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியாருக்கு அடியேன்'' என்றும் மாணிக்கவாசகர் திருக்கோவையார் எனும் நூலையியற்றும் போது அவர் சொல்லச்சொல்ல சிவபெருமானே ஏட்டில் எழுதினாராம். அதற்கு அடையாளமாக சிவன் இறுதியில் தானே ''அழகிய திருச்சிற்றம்பலமுடையான்'' எனக் கையெழுத்திட்டதாகவும் கூறுவர்.
சுந்தரர் தாம் பாடியருளிய திருத்தொண்டத்தொகையில் திருநீலகண்டக் குயவர் முதல் திருநீலகண்டபாணர் ஈறாக அறுபது பேர்களையும் இறை அடியார்களைக் குறித்து அடியேன் குறித்துப் பாடினேன் எனப் போற்றியுள்ளார். அவர்களுடன் திருத்தொண்டகைத்தொகை அருளிய சுந்தரர் அவர் தந்தை சடையனார், தாயார் இசைஞானியார் ஆகிய மூவரையும் சேர்த்தெண்ணிச் சிவனடியார்கள் (நாயன்மார்கள்) 63 பேர் ஆவர். தில்லை வாழ்அந்தணர் பொய்யடிமையில்லாத புலவர் பத்தரய்ப்பணிவார் பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன் போல வைத்தார். திருவாரூர் பிறந்தார்கள், முப்போதுந்திருமேனி தீண்டுவார் முழுநீறு பூசிய முனிவர் அப்பாலும் அடிசார்ந்தார் ஆகிய ஒன்பது திருக்கூட்டத்தாரும் தொகையடியார்கள் எனப் போற்றப்பெறுவர். திருத்தொகையில் குறிப்பிடப்பெறாதவரும் சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவரும் ஆகிய மாணிக்கவாசகர் தனித்திருப்பவர் பெரியபுராணத்தில் இடம்பெறாத மாணிக்கவாசகரின் சிவபக்தியைத் திருவாசகம் மட்டுமின்றி ஆவுடையார் கோவில் திருப்பெருந்துறையில் உயர்ந்து நிற்பதும் திருவாதவூரின் திருவருட்புகழை என்றும் பறைசாற்றுபவை. சேக்கிழார் முன்னும் பின்னும் இல்லாத முறையில் ஓர் ஒப்பற்ற காப்பியத்தைப் படைத்தார் என்பதையும் அக்காப்பிய நாயகமாகத் தொண்டு என்ற பண்பையே வைத்துள்ளார் எனப் பேராசிரியர் அ.ச.ஞா அவர்கள் உரைத்துள்ளார்கள். பக்தியைக் கருவியாகக் கொண்டு பிற உயிர்கட்குத் தொண்டு செய்தவர்கள் சமுதாயத்தை வாழ்விக்கும் பிறர் நலம் காணும் பெருமக்களாக இருந்தமையால் தான் அவர்கள் திருத்தொண்டர்களாகப் பாடப்பட்டுள்ளனர். இத்தகைய அடியார்கள் சமய அனுபவமும் இறைவன் அருளும் பெற்றவர்கள். கார்டன் ஆல்போரிட் என்பவர் சமய அனுபவம் பெற்றவர்கள் பற்றிக் கூறுகையில் ''சமயவாதியின் மனப்பான்மை அக நிலை அடிப்படையில் வெவ்வேறு அனுபவங்கள் தருகின்றன. அதன் வேர்கள் தொண்டு எனும் நீர்நோக்கி மண்ணைக் குடைந்து பாறையைப் பிளந்து பூமிக்குள் புதைந்து ஓடிஅடியார்களை அரவணைக்கும்; அன்புகாட்டும் ஆனந்தமூட்டும் எனக் கூறுவதை, சுந்தரரின் வாழ்க்கையினை முதல் கதையாக சேக்கிழார் எடுத்துக்கொள்கிறார். சிவன் தொல்லை மால் வரை பயந்தவியால் தன் திருப்பாகன் அல்லல் தீர்ந்து உலகுஉய்ய மறையளித்த திருவாக்கால் தில்லைவாழ்வு தந்தனர் தம் அடியாருக்கும் அடியேன் என்று எல்லையில் வன் புகழாரை எடுத்து இசைப்பா மொழி என்றார் எனத் திருத்தொண்டர் புராணம் எழுதப்பணிந்தார்.



# தொல்காப்பியம் காட்டும் பண்பாட்டு நெறிகள்!

புலவர் தி.வே. விஜயலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்.,

48

## தொல்காப்பியர் கூறும் இல்லறப்பயன்

காமஞ்சான்ற கடைக் கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே
(தொல் – கற்பியல் – 1138)

காமம் நிறைந்த உறுதியான காலத்தில் நலம்சிறந்த மக்களோடு சுற்றமொடு கூடி இல்லறம் புரிந்து சுற்றமொடு தலைவனும் தலைவியும் விருந்தோம்பலை இடையறாது செய்து வாழ்தலே கற்பின் பயன் என்று முனைவர் வ.சுப. மாணிக்கம் விளக்கம் கூறுவார்.

சிறந்தது பயிற்றல் என்னும் தொல்காப்பியக் கருத்து திருக்குறள் இல்லறவியல் விருந்தோம்பல் அதிகாரத்தில் வளம் பெறுகின்றது. சிறந்த செயல்களை இடைவிடாது நினைத்தல் சிறந்தது பயிற்றல் எனப்படும்.

வருவிருந்து வைகலும் ஒம்புவான் ( குறளடி )
வருவிருந்து பார்த்திருப்பான் (குறளடி)

ஆகிய குறட்பாக்கள் இக்கருத்திற்கு அரண் செய்கின்றன. தற்காலச் சூழலில் கணவனும் மனைவியும் கருத்தொகுத்து இல்லறம் நடத்தி விருந்தோம்பி மக்களை ஈன்று வளர்த்து நன்னிலையில் நிறுத்தி முதுமையில் அவர்களுடன் இணைந்து சுற்றமொடு மகிழ்ந்து ஒருவருக்கொருவர் உதவி வாழ்தலே இல்லறப் பயன் எனலாம்.

## மடலேறுதல்

காதல் கைகூடாத நிலையில் தலைவன் பனங்கருக்கினால் செய்த குதிரையில் ஏறித் தன் காதலை ஊராருக்கும், தலைவியின் பெற்றோருக்கும் உணர்த்துவது மடலேறுதல் எனப்படும். இந்தப் பழக்கம் பண்டைத் தமிழரிடம் இருந்தது அன்பின் ஐந்திணையில் தலைவன் மடலேறுவதாக அச்சுறுத்துவான். ஆனால் மடல் ஏறுவது இல்லை. பெருந்திணையில் தலைவன் மடலேறுவான் – ‘‘ஏறிய மடல் திறம்’’ என்று பெருந்திணையைக் குறிப்பிட்டுள்ளார்.

‘‘எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான’’
(தொல் – பொருள்.38 )

தலைவன் தலைவியின் களவு, கற்பாக மாறுவதற்கு மடலேறும் வழக்கம் பெருந்துணை புரிந்தது.

## மணவாழ்க்கை

1. களவு வாழ்க்கை 2. பெற்றோர் இசைவுடன் தலைமகனும், தலைமகளும் திருமணம் செய்து கொண்டு வாழும் கற்பு வாழ்க்கை. பெற்றோர் இசைவு இல்லாச் சூழலால் உடன்போக்கு நிகழும் கற்பு வாழ்வைத் தொல்காப்பியம்,

‘‘கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே’’
(தொல் – பொருள்– 1088)

‘‘பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப’’
(கற். 4) (தொல் 1091)

பெற்றோர் மணம் புரிய இசையாவிட்டால் காதலர் இருவரும் உற்றார் அறியாமல் வேற்றிடம் சென்று மணம் புரிந்து கொள்வர். இதனை,

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே...
புணர்ந்துடன் போகிய காலையான (தொல் கற்பியல் 1089))
என்பார் தொல்காப்பியர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை மாறுவதான சூழல் ஏற்பட்டபோது. அந்நெறியைக் காத்திடவே திருமண முறைகள் தோன்றின என்பதைத் தொல்காப்பியர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டால் வலியுறுத்துகிறார். கற்பு என்பது அவள் உயிரினும் மேலானது என்கிறார்.

‘‘உயிரினும் சிறந்தன்று நாணே
நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று’’
(கற். 1059)

*தொடர்ச்சி அடுத்த பக்கம். . . .*



# தொல்காப்பியம் காட்டும் பண்பாட்டு நெறிகள்!

புலவர் தி.வே. விஜயலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்.,

48

## சகுனமும் நிமித்தமும்

சகுனம் பார்க்கும் வழக்கம் அன்று இருந்ததை அறிகிறோம். பல்லி சகுனம் பார்ப்பது தமிழரிடையே மிகவும் பரவலான ஒன்றாகும். தலைவி உடன்போக்கு சென்ற காலத்தில் பல்லி மொழிதல், அக்கம் பக்கத்தினர் கூறும் நற்சொல்லையும் நிமித்தமாகப் பார்த்தாள் என்பதை,

‘‘தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழி பொருள் தெரிவது
நன்மை தீமை அஞ்ச சார்தலென்று’’
என்னும் நூற்பா உணர்த்துகின்றது.

பறவை குறுக்கீடு பார்க்கும் பழக்கம் நிலவியிருந்தது. என்பதை,

‘‘நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்’’ (தொல்.புற 1037) என்ற பாடலின் திணை வரி புலப்படுத்துகிறது.

பெண்களுக்கே உரிய ஒரு செயலாக ஒப்பாரி அமைகிறது. ஒப்பாரிப் பாடல்களின் வாயிலாக இறந்தவரின் வீரம். குடிச் சிறப்பு, உறவுநிலை, உயர்ந்த குண நலம் போன்றவை வெளிப்படும் பண்டைச் சமுதாயத்தில் இத்தகைய முறைகள் இருந்தன என்பதைக் காஞ்சித் திணையின் வாயிலாகத் தொல்காப்பியர் கூறுகின்றனர்.

இதனை,

‘‘ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்’’ ( புறத்திணை 1023 )

என்ற வரிகள் விளக்குகின்றன.

## பிறந்த நாள் விழா

மன்னர்கள் தமது பிறந்தநாளைக் கொண்டாடும் பழக்கத்தினை உடையவராக இருந்தனர். இதைத் தொல்காப்பியர்,

சிறந்த நாணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும் (பொருள் 88)

எனப் பிறந்தநாளைப் பெருமங்கலம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்

## பெருஞ்சோறு வழங்குதல்

மன்னர்கள் போர் முடிந்தவுடன் படைவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்கினார் இதனைத் தொல்காப்பியர்.

‘‘பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும் (பொருள் 65)’’

என்ற அடியின் மூலம் சுட்டிக்காட்டுகிறார்.

பழந்தமிழர் நாகரிகத்தைப்பற்றிப் பரக்கப் பேசும் நூல் தொல்காப்பியம். மக்கள் வையத்து வாழ வழிவகுத்துக் காட்டும் இலக்கிய நெறியினை எடுத்து இனிதியம்பும் ஒப்பற்ற தனிப் பெரும் நூல் இது. தமிழினத்தின் பரந்துபட்ட பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் தொல்பெரு நூலாகத் தொல்காப்பியத்தைச் கருதுவதில் யாதொரு தடையும் இல்லை இந்நூலைத் தம் விழுமிய சொத்தாக எண்ணித் தமிழர்கள் பாதுகாக்க வேண்டும்.

தலைமைச் சிறப்பும் தாய்மைப் பண்பும் கொண்ட இந்நூல் இலக்கியச் சாயலைப் பொதும் பெற்றுள்ளது. தமிழ் நாகரிகத்தின் கலங்கரை விளக்கமாக ஒளிவீசும் ஒழுங்கு பெற்ற சிறப்புகள் கொண்ட இந்நூலை ஐயம் திரிபறக் கற்று உணர்வோமாக !

*வளரும் . . . . .*

இனிய இந்திய விடுதலை நாள் கொண்டாட்ட நல்வாழ்த்து!



**பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்**
**கனடா**

122

நல்வழியில் வாழ்க நல்பாரதத் திருநாடு.

எத்தனையோ பேரின் பேருழைப்பாலும் உயிரீகத்தாலும் வென்றெடுத்த வெற்றித்திருநாள் இந்திய விடுதலை நாள் ஆகத்து 15, 1947.



வாழ்க பாரத மணித்திருநாடு!

உழைத்த அனைவருக்கும் விடுதலைக்குப்பிறகும் உழைத்த அனைவருக்கும் தலைவணக்கம்.

பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற்றோம். ஆனால், இந்த விடுதலை இன்னும் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. பழங்குடிகள் முதல் பற்பல மக்கள் குழுக்கள் இனத்தாலும் சாதியாலும் மதத்தாலும் மொழியாலும், பால்வேற்றுமையாலும், ஏழ்மையாலும் பிற்படுத்தப்பட்டு விடுதலை நாட்டில் இருப்பதற்கான அடையாளம் கூட இல்லாமல் முழு உரிமை இல்லாமல் இருக்கின்றார்கள்.

நாட்டின் மீது பற்று கொண்டவர்கள் அனைவரும் நம் நாடு எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கவேண்டும். எல்லோரும் இந்நாட்டின் முற்றுரிமை பெற்ற முழு விடுபாடாட்டாண்மை கொண்ட மக்களாக இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள்.

அடிப்படை வசதிகள் அனைவரும் பெறவேண்டும். ஏழ்மை கீழ்மை அற்ற செல்வச்செழிப்பான நாடாக உயரவேண்டும். ஊழல் ஒழியவேண்டும். அறியாமை நோய் அறவே அகலவேண்டும். மணல், கனிவளக் கொள்ளைகள், கல்விக் கொள்ளைகள் ஒழியவேண்டும்.

நீர்வளம் முதல் அனைத்து வளங்களும் அறமான முறையில் பகிர்ந்தின்பமாக வாழ வேண்டும். ஆட்சியர் நூறாயிரம் மடங்கு இன்னும் பொறுப்பாக ஆளவேண்டும். அறமன்றங்கள் நல்லறம் காக்க வேண்டும். நம் நாட்டின் மிகுந்த மக்கள் தொகை நம் பெருவளம். அதனை அறிவார்ந்த முறைகளில் வளர்த்தெடுக்கவேண்டும். மக்கள் கோடி மடங்கு விழிப்படையவேண்டும். இசுடெரிலைட்டு ஆலை போல நச்சுக்கழிவைக் கக்கும் ஆலைகள் ஒழியவேண்டும். மக்களைச் சுட்டுக்கொல்லும் தீச்செயல்கள் அறவே அற்றுப்போகவேண்டும். விடுதலை பெற்றென்ன பயன் இப்படியெல்லாம் நடந்தால்? அடக்குமுறைகள் ஒழியவேண்டும். அறிவார்ந்த வளர்முக கூட்டுழைப்பால் உயரும் நன்முறைகள் பெருகவேண்டும். மதத்தீவிரவாதம் முதலான நாட்டைக் கெடுக்கும் கடுநோய்கள் ஒழியவேண்டும். இந்தி பேசும் மக்கள் பெற்றிருக்கும் உரிமை மற்ற மொழிகள் பேசும் மக்களும் சமமாகப் பெறுதல் வேண்டும். வாழ்க இந்தியா! உலகின் முன்னாண்மை நாடாக உயர நல்வாழ்த்துகள்!





மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

## 3. பொருள் நிலை . . .

### செல்வப் பேரன்பர்களே !

நேர்வழியால் பொருளீட்டுதல் எளிதன்று என்பதுவே பலர் வாய்ச் சொல். பண்புடையான் பெருஞ் செல்வனாதல் உலகத்து அரிய காட்சி ‘பேதை பெருஞ் செல்வம் உற்றக் கடை’(837) என்றும், 'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம்' (1000) என்றும் வள்ளுவரே ஒப்புவர். நாம் அறியும் செல்வப் பெரியோர் பலர் மனத்தைக் கொன்று நேர்மையைச் சிறையிட்டுப் பூட்டி வைத்தபின், பொருள் திரட்டியோராகவே உளர். அரசியல் விதிகளும் நேர்மைக் கொலைக்குப் பெருங்காரண மாகுப. ஒழுக்கமுடையார்க்கே இடையூறாய் அதனை மறந்தார்க்கு ஊன்றுகோலாய் அமைப, பொருளின் வரவும் செலவும் உலகத்து ஒரு கணிப்பிற்கு உட்பட்டு நிற்கவில்லை.

பெற்றோர் தம் கல்வியறிவு ஒழுக்கங்களை மக்கட்கு மாற்ற வியலாது. இவை கைமாறத்தக்க பொருள் அல்ல. செல்வம் ஒரு நொடியில், ஓர் எழுத்தில், ஆள் மாறத்தகும் எண்மையுடையது. வழக்காடுவார்க்குச் சட்டம் போலச் செல்வம் யார்க்கும் எங்கிரைக் கண்ணும் வளைந்து கொடுக்கும் தன்மைத்து. அவ்விய கெஞ்சத்தான் ஆக்கம் பெறுதலும், செவ்வியான் கேடு உறுதலும், அறத்தின்கண் வாழ்வான் செல்வத்தாழ்வு படுதலும் பொருளுலகத்து இயற்கை.

நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்

நல்லவாம் செல்வஞ் செயற்கு (375)

எனப் பொருளின் பண்பற்ற இயற்கையை வள்ளுவரும் அறியர். அறிந்து வைத்தும், வாழ்க்கைச் செலவிற்கு

வேண்டிய பொருளை நேர்வழியால் யாரும் ஈட்டவியலும் என்பதுவே அவர் அணிபு.

பொருள் யார்க்கும் வேண்டும்; அதனை யாரும் நன்னெறியால் ஈட்ட வேண்டும் என்பது வள்ளுவம். இவ்வதி ராப் பொருட் கொள்கையை இனிப் பல நிலைகளில் ஆராய்வோம். ' பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு (247) என உவமையானும், பொருளல்லது இல்லை பொருள் (751) என உண்மையானும் வலியுறுத்திய வள்ளுவர், 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' (752) என்று ஓர் உலகியல்பு கூறினார். வறியோனைச் செல்வரும் சிறுமைப்படுத்துவர். என்போல் இவனும் ஒரு வறளிதானே எனப் பிற வறியோரும் சீரழிப்பர்.

ஈன்ற தாயும் தன் மகன் என நினையாது பிறன்போல நோக்குவள். இன்னோர் ஒருபாலாக, யாமும் இகழ்வேம் என்று வள்ளுவர் தம்மையும் இகழ்வார் கூட்டத்தொடு உளப்படுத்திக் கொள்ளும் குறிப்பு எல்லாரும் எள்ளுவர் என்ற கடைக்கண் அமைந்து கிடப்பக் காணீர் .ஆசிரியரின் முதல்நோக்கம் பொருளின் இன்றியமையாமை காட்டி, யாவரையும் இடையறது . பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் (751) என்பதனால் இல்லம் நிரப்பும் வன்மையும், ' எண்ணிய தேயத்துச் சென்று இருளறுக்கும்' (753) என்பதனால் தூது செல்லும் தன்மையும் செல்வத்தின் தனியாற்றல்களாம்.

இவ்வுண்மையுணர்பவர் பொருளைச் குறைத்துப் பேசார். * கல்வி கேள்விகளே அழிவில் செல்வங்கள்: பொருளோ அழிதல் மாலையது; இஃதோர் செல்வமாமோ என்று இவ்வுலாத்துத் தூற்றிப் பேசார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் வேண்டும் என்றே உரிய உணர்வர். அற்கா இயல்பிற்றுச் செல்வம்' என வள்ளுவரும் ஒப்பி மொழிப. 333

நிலையாமை செல்வத்தியல்பு என்பதனால், பற்றுள்ளங் கொண்டு அதனை கிறுத்தப் பாடுபடுதல் பேதைமை என்பது கருத்தாமே யன்றிப் பொருளீட்டம் குற்றம் என்றே வேண்டாம் என்றோ கருத்தாகாது. உடல் நிலையாதது என்பதனால், மக்களைப் பெறுதல் இழிவு என்றும் அதனை விளைக்கும் இல்லறம் இழிவு என்றும் கொளப்படுமோ?

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை

செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு

சங்க இலக்கிய ஆய்வறிஞர்

64

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலைக்காதவற்றை நிலையானவை என்று கருதும் சிற்றறிவு கொண்டிருப்பதும் இழிவு ஆகும் என்றார் திருவள்ளுவர். செறிவான மெய்ப்பொருளைச் செழுமையாக்கி முன்வைப்பதில் அவரே மிக வல்லவர். நிலையாத வாழ்வை நிலைத்தது என்று எண்ணி வாழ்வதே அறியாமை. வீண்தான், எத்தனைக் காலம் மண்ணில் வாழ்ந்தும் இந்தச் செம்பொருளைப் புரியாமை. வரும் செல்வம் கரைந்து விடுவது போலவே வாழ்நாளும் காலப்போக்கில் கரைந்து தீர்ந்துவிடும்.

இதனை நன்குணர்ந்தால் மனம் சமச்சீராகித் தேர்ந்துவிடும். எவ்வளவு உறுதியாக இருப்பினும் மரத்தைச் சிறிதுசிறிதாக வாளால் அறுக்க அறுக்கக் குறையும். உலகில் ஒவ்வொரு நாளாக அகவையைக் கழிக்கழிக்க இவ்வுயிர் கசிந்து மறையும். இந்த நொடியில் இருப்பவன் அடுத்த நொடியில் இறக்கும் அற்ப வாழ்க்கை. இதில் அருமை மிக்க செயல்களைச் செய்வதற்கே வேண்டும் வேட்கை.

நலத்தோடு விளங்கும்போதே நன்மைகள் பல செய்வது சாலச் சிறந்தது. இதனை ஆழ்ந்து கற்றதில் என் அகக்கண் திறந்தது. " நிலைத்த புகழுக்கான செயல்களைச் செய். உலகில் ஓங்கி நிற்கும் உனது கை " என்று என்னைத் தன்வயப்படுத்தினாள் தமிழன்னை. அவளே நிறைத்தாள் என் கண்ணை !

இதோ நாற்புறமும் செறிந்து மணக்கும் எனது நான்மணிமாலை !

## அகவல்

துடிப்புடன் வாழும் தூய வாழ்வினைப்
பிடிப்புடன் கொண்டேன் பேரொளி அன்னையால்
தொகையினைப் பயின்றேன் துலக்க மாகப்
பகுத்துப் படித்தேன் பதிற்றுப் பத்து

மூன்றாம் பத்து முறைபடப் பாடியே
ஈன்றார் பாலைக் கௌதம னாரே
சிறப்பாய்ப் பல்யானைச் செல்கெழு குட்டுவன்
திறமிகு கோலாட்சி திகழ்ந்திட வைத்தே

தவத்தால் நிலைத்தத் தன்னரு நாட்டில்
அவரவர் நிலத்தை அறமுடன் பகுத்தே
பலர்க்கும் வழங்கிப் பயந்தனன் நன்மை
மலைபோல் புகழ்நிறை மாண்புடை யோனே

நான்காம் பத்து நலத்துடன் ஆண்ட
கோனவன் புகழ்மிகு கொள்கையில் சிறந்தோன்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின்
வளங்கள் பாடி வடித்த புலவர்

காப்பி யாற்றுக் காப்பிய னாரின்
பாப்புனை வெல்லாம் பயிலவும் இனிதாம்
வழங்கினாள் அன்புடன் அன்னை
மழையெனத் தமிழை மகிழ்வுடன் எமக்கே.

## 68

## வெண்பா

எமக்கும் அருளினாள் எம்மையும் தூக்கி
அமர்த்தினாள் உச்சியில் ஆங்கே – கமழ்ந்திடச்
செய்தே கடமைகள் சேர்த்தாள் கனவுகள்
மெய்ப்படப் பூத்தது மேனி.

## கலித்துறை

மேனி பொலிய மிடுக்கும் பெருக
மிகுமகிழ்வாய்த்
தேனின் சுவையில் திளைத்த சுரும்பாய்த்
தெளிதமிழில்
வானின் அமுதம் வழிந்த தெனவே
வரமளித்தாள்
நானின் றெதிலும் நலமே மலர்ந்தேன்
நகைமுகமே.

## விருத்தம்

நகைமிகு வாழ்வில் நறுமணம் சேர
நாவில் தமிழே நடம்பயில
பகையில தாகப் படர்ந்திடும் கேண்மை
பாரில் இசைந்தே படம்பிடிக்க
மிகையுடைத் தாக மிதந்திடும் இன்பம்
மேவி அடர்ந்தே மிடைந்திடினும்
தகைமையும் கூடித் தளங்களும் மாறித்
தாவும் மனமும் தணிந்ததுவே !



திரு. இரா. குமரவேலன்



## CHAPTER 3

### BHARATAN AS REGARDED BY THE HERO OF THE EPIC

All returned to the capital from nandiyampati. Rama was seated on the golden chariot. Lakshmana held the umbrella. Satruguna waved the "samara" and bharata with Joyful tears wetting the dust, drove the chariot.



ஊழியி னிறுதி காணும் வலியின துயர்பொற் றோரின்
எழுயர் மதமா வன்ன விலக்குவன் கவிகை யேந்தப்
பாழிய மற்றைத்தம்பி பால்நிறக் கவரி பற்றப்
பூழியை யடக்குங் கண்ணீர்ப் பரதன் கோல் கொள்ளப் போனான்

When the coronation of Rama was being celebrated Bharata held the white umbrella while hanuman held the simhasanam (அரியணை) Angada had the sword and lakshmana and satruguna waved chouris (கவரி) and Vasishta crowned Rama.

அரியணை யனுமன் தாங்க வங்கத னுடைவாள் பற்றப்
பரதன் வெண் குடை கவிக்க விருவருங் கவரி வீச
விரைசெறி கமலத்தாள் சேர் வெண்ணெய் மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

Immediately after this, Rama had also performed the crowning of Bharata as the prince or Yuvaraja of Ayodhya.

Thus a complete study of kamba ramayanam shows that Rama showered boundless affection upon Bharata in all his words and deeds. Whenever the two brothers met one can see the great ideal brotherhood which existed between them. The two brothers vied with each other in expressing their affection. Rama considered Bharata as a great example of Dharma and was confident that he would not at all be in the wrong path and that he would rule the kingdom to the great satisfaction of the people.

It will be seem from the above that Rama's estimation of Bharata was that of an elder brother for his younger brother who was devoted to him in all sincerity, In turn Bharata's love and respect for rama would also show the high ideal set before him to be followed. The love of the two brothers was mutual with a pleasing difference that the affection of the older was more of a father and guide while that of bharata was more like a Baktas to his own favourite God

### BHARATA AS ESTIMATED BY THE OTHER CHARACTERS OF THE EPIC ESPECIALLY BY LAKSHMANA AND GUHA

The character of Bharata can be spotlighted firstly by the narrative events in his life and mission in the world. There are events in Bharata's life to show the high ideal set as an example to the people of the time and the people of the future generations .He comes accross several other persons in the narrative and they have characters of their own. Through them we have an oppurtunity to study how those characters have estimated Bharata.

Bharata is one of the Chief characters in the epic and he plays an important part next to Rama. During Rama's exile and before his encounter with Ravana, Rama meets Guha, Hanuman, Sugriya and Vali. The first man was to meet was Guha who learnt Rama's mission and the part played by Rama. His high ideal in life and devotion to Rama overwhelmed him .

Lakshmana stands next in giving an estimation of Bharata for he was a man of temper. His emotions would be aroused suddenly if somebody acted or told him anything causing damage to Rama.

*To Continue……*





16.08.2023 அன்று மலர்ந்த உலகத்தமிழ் படித்தேன். மகிழ்ந்தேன்.



பேராசிரியர் முனைவர் மா.நன்னன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அதற்குரிய தொகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பேராசிரியரின் வாரிசுகளுக்கு வழங்கிய படம் முகப்பில் இடம் பெற்றிருப்பது சிறப்பே.

தமிழ் எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரின் படைப்புகளை ,அவர்கள் விட்டுச் சென்ற எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்கும் இந்த சிறப்பான பணி என்பது போற்றத்தக்க பணியாகும். எழுத்துலக பிரம்மாக்களுக்கு செலுத்தும் நன்றி கடன் பணி என்று கூட நாம் சொல்லலாம்.

பொதுவாக அறிஞர்களின் படைப்புகள், அவர்களின் காலத்திற்குப் பிறகுதான் நட்டுடமையாக்கப்பட்டு வருவதைப் பார்த்திருக்கிறோம்.

இந்த இடத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த எழுத்தாளர் செ. திவான் அவர்களுக்கு, அவர் வாழும் காலத்திலேயே அதாவது சில மாதங்களுக்கு முன் நமது முதலமைச்சர் அவர்கள் திரு.செ.திவானின் படைப்புகளை நாட்டுடமை ஆக்கி அதற்குரிய தொகையை வழங்கி பெருமை சேர்த்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் முகப்பு படத்தில் பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தால் ஆங்கிலப் பயிற்சி வழங்கப்பட்டு, அந்த பயிற்சியைப் பெற்ற மொழி பெயர்ப்புத் துறை அலுவலர்களுக்கு சான்றிதழை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் வழங்கிய படமும், அதுபோல தமிழ் வளர்ச்சித் துறையும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டமும் இணைந்து வெளியிட்ட ஆட்சி சொல் அகராதியினை மாண்புமிகு அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் வெளியிட்ட படமும் முகப்பு பகுதிக்கு அணி சேர்க்கின்றன.

இதழின் முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் வழங்கப்படும் பல விருதுகளில் பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி. க. விருது, திருவள்ளுவர் விருதுகள் பற்றி பார்த்தோம்.

இந்த விருதுகளைப் பெற்ற அறிஞர்களின் பெயர்களையும், இந்த விருதுகளின் தொகையையும் தெரிந்து கொள்ள உதவியாக இந்தப் பகுதி அமைந்திருந்தது.

இதழின் அடுத்தப் பகுதி நூலேணி பகுதி...

இந்தப் பகுதியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் படைப்புகள் தொடர்ந்து பட்டியலிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதே.

அடுத்து தமிழெழுச்சிப் பகுதியில் வழக்கம் போலவே மகாகவி பாரதி,பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் கவிதை வரிகள் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த வரிகளை நாம் படிப்பதற்கு பேருதவி செய்கின்ற பகுதியாக தமிழெழுச்சி தொடர்ந்து விளங்கி வருகிறது.

ஆகஸ்டும் அணுகுண்டின் அழிவும் என்ற தலைப்பில் ஆசிரியம் பகுதியில் வெளியான கட்டுரை நிறைய தகவல்களை தந்து செல்கிறது.

சுமார் 78 ஆண்டுகளுக்கு முன்பாக 1945 ஆகஸ்ட் 6–ல் ஹிரோஷிமா நகரின் மீது வீசப்பட்ட உலகு அழிவுக் குண்டு பற்றிய பதிவும் ,அந்த சம்பவத்திற்கு பிறகு உலகமே அணுகுண்டை ஒரு பேரழிவின் விஞ்ஞான படைப்பாகவும் பார்த்து வருவதை பார்க்கிறோம்.

இனி ஒரு காலமும் இப்படிப்பட்ட பேரழிவுகள் இந்த மண்ணில் ஏற்பட்டு விடக்கூடாது, இன்னும் ஒரு ஹிரோஷிமாவை இந்த உலகம் தாங்காது, இந்த விபத்துக்கு காப்பீடு தரும் சக்தி எந்த உயிருக்கும் இருக்காது, பெறுவதற்கு உயிர் ஒன்றும் இருக்காது என அறிந்து சமாதானமாய் வாழ்வோம் என ஆசிரியர் நிறைவாக சொல்லி இருப்பது நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி ஆக்கபூர்வமாயின் அதுதான் மனித குல கண்டுபிடிப்பின் மாட்சிமையாகும்.

ஆக்கப் பூர்வமான வளர்ச்சிக்கு விஞ்ஞானம் எவ்வளவோ உதவியாய் இருக்கிறதல்லவா?

நிலவின் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தான் இன்றைக்கு நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட நமது சந்திரயான்–3 விண்கலம் 23–ஆகஸ்ட் அன்று (அதாவது உலகத்தமிழ் மின்னிதழின் 194–வது இதழ் வெளியாகும் நாளில்) நிலவில் தரையிறங்கும் என்ற செய்தியும் இதன் நமக்கு மகிழ்ச்சி தருகிறதல்லவா?

அந்த மகிழ்ச்சிக்காக நாம் காத்திருக்கிறோம் அல்லவா?

விஞ்ஞானத்தின் இந்த வளர்ச்சி நல்ல வளர்ச்சியாக பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் முயற்சிகளை தவிர்ப்பதும் முக்கியமான ஒன்றாகும்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*





*முன்பக்கத் தொடர்ச்சி . . .*



இதழின் அடுத்த பகுதியான அவ்வப்போது பகுதியில் 12.07.2023 அன்று நடந்த கலைஞர் நூற்றாண்டு ஆட்சி மொழிக் கருத்தரங்கில் பேசிய மாண்புமிகு அமைச்சர் திரு.மு. பெ.சாமிநாதன் அவர்களின் உரையின் மூன்றாவது பகுதி வெளியாகி இருந்தது...

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ,இன்றைய முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக ஆற்றி வரும் பணிகளோடு அனைவரும் ஒத்துழைத்து ,தமிழ் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டது போல நாமும் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தேன்துளி 1–ல் கலெக்டர் பதவிக்கு உள்ளூர் மொழி தெரிந்திருக்க வேண்டும் என அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனி அரசின் சென்னை கவர்னர் உத்தரவு பிறப்பித்திருப்பதைப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன்.

தேன்துளி இரண்டில் எந்நாட்டவராலும், எக்காலத்தவராலும், உவந்து ஏற்றுக் கொள்ளுமாறு, என்றும் நிலைத்த பண்புகளையும், உண்மைகளையும், நெறிகளையும், சிந்தைக்கும், செவிக்கும் இனிய சொற்களாக இருப்பது மணிவாசகர் அருளிய திருவாசகம் என சொல்லும் விதம் அருமை .

கட்டுரைப் பகுதிக்குள் நாம் செல்வோம் ...

சேர மன்னர் வரலாறு எழுதி வரும் உரைவேந்தர் ஔவை துரைசாமியின் கட்டுரை படிக்கப் படிக்க பரவசத்தை ஏற்படுத்தி தருகிறது.

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா எழுதி வரும் ஆங்கிலம் அரும்பிய அரசும்– வாழ்வோம் என்ற பகுதியில் நிறைய புதிய புதிய செய்திகளை தெரிந்து கொள்ள முடிகிறது.

நீர்புகாத துணி வகையை கண்டுபிடித்த விஞ்ஞானியான Charles Mackintosin என்பவரின் பெயரே இத்தகைய துணிக்கும் துணியிலான போர்வைக்கும் பெயராயிற்று என்ற செய்தி புதிய செய்தியாக நான் தெரிந்து கொண்டேன்.

தொழிற்துறை மொழியும், விஞ்ஞான மொழியும் ஆங்கிலமே என்ற நிலைமை உருவாகியது என விரிவாக வழக்கில் வல்லுநர் சொல்லி இருப்பது சிறப்பாக இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதினை பெற்ற பேராசிரியர் சி. அ. சங்கரநாராயணன் தரும் நற்றிணை –ஆங்கிலம் சிறப்பாக வாரந்தோறும் வெளியாகி வருகிறது. பாராட்டுக்கள்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா குறித்து பல்வேறு கவிஞர்கள் எழுதிய கட்டுரைகளை ஆண்டுகளைக் குறிப்பிட்டுத் தொகுத்துத் தந்து கொண்டிருக்கும் முனைவர் தேவி நாச்சியப்பன் அவர்களின் பதிவு மனதை வெகுவாக கவர்ந்து செல்கிறது.

இந்த வாரம் இராயவரம் அரிமா காசி செட்டியார் 11.07.2002–ல் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றி எழுதிய கட்டுரையை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இராயவரத்தைச் சார்ந்தவர் என்கின்ற செய்தியை இப்போதுதான் நான் அறிகிறேன்.

குழந்தைக் கவிஞருக்கு நடத்தப்பட்ட மணிவிழா ஒன்றில் அவர் எழுதிய, "ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்" என்ற வரிகளை உலோகத் தட்டில் அச்சிட்டு 300 பள்ளிகளில் வழங்கப்பட்ட ஒரு மாபெரும் செய்தியை படித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன் நான்.

இன்னும் இராயவரம் முத்துமாரியம்மன் கோயிலில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல் வரிகள் பதிக்கப்பட்டு இருப்பதும் மகிழ்ச்சியான செய்தியாக இந்த கட்டுரையில் அரிமா. காசி செட்டியார் பதிவு செய்திருக்கிறார்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . .*



# பூமழை



*முன்பக்கத் தொடர்ச்சி . . .*

குழந்தை இலக்கியங்கள் குறைந்து வரும் இந்தக் காலகட்டத்தில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் படைப்புகள் அத்தனையும் மறு வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியது மிக அவசியம் என்கின்ற கருத்தினை நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான் அவர்கள் காலம் கடந்து வந்த இலக்கியங்கள் எல்லாம் கடவுள் வாழ்த்தோடு தொடங்கி இருப்பதை அருமையாக சொல்லிச் சென்றிருக்கிறார். செவிசை மாமணி அவர்களின் பதிகங்களை படியுங்கள் என்ற கட்டுரை சிறப்பாக செல்கிறது.

பெரும் பேராசிரியர் செ.இரா. செல்வகுமார் எறும்பியல் என ஆச்சரியமிகு செய்திகளை தருகிறார்.

கடந்த 26.07.2023 அன்று வெளியான உலகத் தமிழின் 190 –ஆவது பதிப்பில் எறும்பு வகைகளை பற்றி அரிய செய்தியைத் தந்தவர் தான் இந்தப் பெரும் பேராசிரியர் செ.இரா. செல்வகுமார் அவர்கள்.

எறும்பு என்கின்ற மிகச் சிறிய பிராணி இந்த உலகில் 13800 வகைகளில் இருப்பதாக அந்த வாரத்தில் பெரும் பேராசிரியர் பதிவு செய்திருந்ததை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். வாழ்த்துக்கள் பேராசிரியர் அவர்களே...

வள்ளுவம் வாயிலாக நன்னெறியைத் தரும் தமிழன்னையால் நான்மணிமாலை தந்து கொண்டிருக்கும் செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகர பாபு அவர்களின் எழுத்துக்கள் பாராட்டுக்களைப் பெறுகிறது.

மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களின் வீட்டு வைத்தியம் என்கின்ற நூல் பற்றிய பதிவினை படித்தேன்.

அந்த நூலின் சிறப்புகளை மருத்துவமாமணி அம்மா அவர்கள் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

அந்த நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பை வெகுவாக சிலாகித்து உள்ளார் .

"ஆங்கில மூலத்தின் பொருளும் உணர்வும் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட நூலில் கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்று மொழி பெயர்ப்புத் திறனை பாராட்டி இருக்கிறார் மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்கள்.

இந்த வார இதழின் நிறைவு பகுதியாக பெரும் தமிழறிஞர் த ஔவை நடராசன் அவர்களுக்கான புகழ் வணக்கம் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகிறது.

ஏனென்றால் கடந்த வாரத்தைப் போலே தி.வே. விஜயலட்சுமி அவர்கள் இந்த வாரத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் ஔவை நடராசன் ஐயா அவர்களைப் பற்றிய புகழஞ்சலியை ரொம்ப சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

வாசிக்க வாசிக்க அந்த தமிழறிஞரை நாம் இன்னும் நிறைய நிறைய தெரிந்து கொள்ள முடிகிறது.

அதே நேரத்தில் அந்த தமிழறிஞர் ஐயா ஔவை நடராசன் அவர்களின் புகழை காலந்தோறும் நாம் காத்து வர வேண்டியது அவசியம் என்பதும் இதன் மூலமாக வெளிப்படுகிறது.

இந்த இதழில் முகப்புப் படத்தோடு இங்கே ஒரு செய்தியை நான் பதிவு செய்து நிறைவு செய்கிறேன்...

முகப்புப் படத்தில் பேராசிரியர் மா. நன்னன் அவர்களின் படைப்புகள் நாட்டுடமை ஆக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் அதற்கான தொகையை வழங்கப்பட்ட படத்தைப் பார்த்தோம்.

இப்போது நான் சொல்ல வருவதை இங்கே பதிவு செய்ய போகிறேன்...

"ஔவை நடராசன் அவர்களின் படைப்புகளையும் தமிழ்நாடு அரசு நாட்டுடமையாக்கித் தர வேண்டும்...

அந்தப் புகழை ஐயா அவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும்..."

ஐயா அவர்கள் மறைந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் திருநெல்வேலியில் பொதிகைத் தமிழ்ச் சங்கம் நடத்திய அவருக்கான அஞ்சலி கூட்டத்தில் "தமிழறிஞர் ஐயா ஔவை நடராசன் அவர்களின் படைப்புகள் நாட்டுடமையாக்கப்பட வேண்டும்... அவருக்கு ஒரு சிலை வைக்க வேண்டும்" என்றும் நான் பேசியதை இங்கே பதிவு செய்கிறேன்.

அடுத்த வார உலகத் தமிழுக்காக காத்திருக்கிறேன் என்று சொல்லி நிறைவு செய்கிறேன் வெளியிருப்பதை பார்த்தேன்...

நன்றி.

கவிஞர் பேரா, திருநெல்வேலி.

தலைவர்,

பொதிகைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி.





16.08.23 உலகத் தமிழ் – 193 பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நன்னன் துணைவியாருக்குக் காசோலை வழங்குதல், மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்களுக்கு பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கிய ஆங்கிலப் பயிற்சி நிறைவு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் ஆட்சிச்சொல் அகராதி 3 தொகுதிகள் வெளியிடப்பட்டது ஆகிய ஒளிப்படங்களை முகப்பில் கண்டு மகிழ்ந்தேன்.

திருவள்ளுவர் முதலாகப் பல தமிழறிஞர்கள் பெயரால் தக்கவர்க்கு இரண்டு லட்சம் ரூபாய்,ஒரு சவரன் தங்கப் பதக்கம் தகுதியுரையோடு வழங்கப்படும் செய்தி கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது.

"ஆகஸ்டும் அணுகுண்டின் அழிவும்" கட்டுரையில்,'இன்னொரு ஹிரோசிமாவை இந்த உலகம் தாங்காது. விபத்துக் காப்பீடு இருந்தாலும் அதனைப் பெறுவதற்கு உயிரொன்றும் இருக்காது என அறிந்து சமாதானத்துடன் வாழ்வோம்.' என்ற ஆசிரியரின் கருத்து உலக நாடுகள் அனைத்தும் உணர வேண்டிய கருத்தாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு ஆட்சி மொழிக் கருத்தரங்கில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரை நிறைவுப் பகுதி அருமை.

தேன்துளி 1 – கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னை கவர்னர் அவர்களின்,கலெக்டருக்கு உள்ளூர் மொழிகள் தெரிந்திருக்க வேண்டும் என்ற உத்தரவு சிறப்பானது.

தேன்துளி 2 – எந்நாட்டவராலும் எக்காலத்தவராலும் உவந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய திருவாசகம் தமிழ்த்தேன் எனக் காட்டுகிறது.

செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் தொழில்துறை,விஞ்ஞானத்துறைச் சொற்களின் தோற்றம், வளர்ச்சி குறித்துச் சுவையாக எழுதியுள்ளார்.ஆங்கிலம் எவ்வாறு செல்வாக்குப் பெற்றது என்பதையும் அறிய முடிகிறது.

அறிஞர் வ.சுப.மாணிக்கனார்,கல்வியறிவுடையாரும் பொருள் வேட்கை கொண்டு முறைப்படி களவு செய்வது எப்படி? வரி கொடாது பணத்தைப் பதுக்குவது எப்படி? என்று சிந்திப்பது பொருளுலகம் வேறு,நூலுலகம் வேறு என மனக் கொலை செய்வதாகக் குறிப்பிடுதல் எண்ணத் தக்கது.

மருத்துவ மாமணி தாரா நடராசன் அவர்களின் கட்டுரையில் ' வீட்டு வைத்தியம்' என்ற மொழிபெயர்ப்பு நூலின் சிறப்பை அழகாக விளக்கியுள்ளார்கள்.

புலவர் தி.வே.விஜயலட்சுமி அவர்கள் ஔவை நடராசனார் அவர்களின் ஆய்வுத்திறன்,வானொலி உரை,சொல்லாய்வு,பட்டி மன்றத்திறன்,பண்பு நலன்கள் குறித்து எழுதியதோடு அவரது செயலர்களின் நலங்களையும் குறிப்பிட்டு நிறைவு செய்துள்ளமை அழகு.

இன்னும் எவ்வளவு எழுதினாலும் ஔவை நடராசன் அவர்களின் புகழ் மணக்கும். மகிழ்ச்சி.





வாகீச கலாநிதி கி.வா.ஜ.

### *தாயின் பிரார்த்தனை . . .*

தோழிமார் உள்ளம் வெந்து உருகியது. மனைத் தலைவி தன் துயரைப் புறத்தார் அறியாதபடி மறைத்தாள். தோழியருடன் பேசுவதும், புன்னகை பூப்பதும், நல்லுரை கூறுவதுமாகவே இருந்தாள். மறந்தும் தலைவனைப் பற்றிப் பேசுவதில்லை அவனை அவள் முன்னிலையிலே குறைகூற அவர்களுக்குத் தோன்றவில்லை. " இவன் உள்ளத்தில் எரிமலை குமுறிக்கொண்டிருக்கிறது. ஆனால், முகத்தில் அதன் சுவடுகூடத் தெரியவில்லை. என்ன காரணம் ?

தம்மைத் தாமே கேட்டுக் கொண்டனர். உண்மை அது அன்று. தலைவி தன்னுடைய கணவனுடைய பிழைக்குணம் கண்டுகொள்ளவில்லை ; அதைப் பெரிதாக எண்ணவும். இல்லை. தனிமைக்காகத்தான் அவன் வருந்தினாள்; உலகமெல்லாம் துயிலில் ஆழ்ந்திருக்கும்பொழுது அவன் வருந்தினான்.

** கடவுளே. இதற்கு ஒரு பரிகாரம் இல்லையா ! " என்று ஏங்கினர் தோழிமார். அந்தப் பெண்தெய்வத்தோடு சார்ந்த சார்பினால் அவர்கள் உள்ளத்திலே கூடக் கோபம் மறைந்து விட்டது. தலைவனுடைய செயலைக் குறித்து அவர்களுக்கு வெறுப்பும் சினமும் முதலில் உண்டாயின. இப்போது அவை மாறித் தலைவியின் இயல்பைக் கண்டு தோன்றிய வியப்பே இடங்கொண்டது.

இந்த ஊர்த் தலைவனாகிய அவன் இத்தகைய செயலில் இறங்கினானே ! ஆழந்தெரியாத மடுவைப் போல இருக்கிறது அவள் உள் " என்றாள் ஒரு தோழி ஆம், நல்ல உவமை. அவனே அந்த மடுவைப் போன்றவன் தான்; ஆழம் அளவிட முடியாத மடு. அதில் முதலை வாழ்கிறது. பலம் பொருந்திய ஆண் முதலை, முதுமைப் போத்து, வாழ்கிறது. எவ்வளவு ஆரமாக இருக்கும் ! ''

"முதலை வாழ்கிறது என்றவுடன் எனக்கு நினைவு வருகிறது. அந்த முதலை மூழ்குவாரைப் பிடித்து அமுத்திவிடும் என்கிறார்கள். யானையானாலும் அதன் வாய்க்குள் போக வேண்டியதுதான் என்று சொல்லு கிறர்களே! உண்மையா ?

"ஆம், உண்மைதான். யானையும் மனிதர்களும் வந்தால் இழுப்பது கிடக்கட்டும். அதைப் பெரிய கொடுமை என்று சொல்லமாட்டேன். அது தன்னுடன் ஒருங்கு வாழும் பெரிய மீன்களையெல்லாம் விழுங்கி விடும். ''

கேட்டவள், " அப்படியா ! இந்த போர்த் தலைவன் இயல்புக்குச் சமமான இயல்பு அதற்கு இருக்கிறது. போலும் ! முதலைப் போத்து முழுமீன் ஆரும் தண்துறை ஊரன் இவன். அந்த முதலையைப்போல இவனும் தன்னுடன் பழகியவர்களுடைய உயிர் தேய ஒழுகுகிறன் என்று சற்று வேகமாகச் சொன்னாள்.

மற்றொருத்தி உடனே பேச்சை நிறுத்தினாள். தலைவியின் இயல்புக்கு மாறாக அந்தப் பேச்சு ஓடிவிட்டதை அவள் உணர்ந்தாள். மேலே அந்தத் தோரணையில் பேச்சை வளர்க்க விரும்பவில்லை ; கடவுளை நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்; நம் தலைவிக்கு இன்பம் உண்டாகும்படி வாழ்த்தவேண்டும்" என்று தொடர்ந்து பேசினாள்.

'அவளுக்கு இன்பம் உண்டாகவேண்டுமானால் பழையபடி தலைவனும் தலைவியும் சேர்த்து முறையாக அறம் புரிய வேண்டும். அவனே அங்கு இருக்கிறான். இவளோ இங்கிருக்கிறாள்."“இருந்தால் என்ன ? இங்கிருந்து போனவன் அவன்தான். அவன் போன தேரும் அங்கு இருக்கிறது. அந்தத் தேர் முன்பெல்லாம் பகலில் எங்கே போனாலும் மாலையில் வீட்டு வாசலில் வந்து நிற்கும். மறுபடியும் அத்தக் காட்சியைக் கண்டு நம் கண் குளிர வேண்டும். கண்போமா ?" அவள் தொண்டை கரகரத்தது. கண்ணில் நீர் ததும்பியது.

*வளரும் . . . .*





37



# புகழ் வணக்கம்

பொற்சபை புகுந்தாரே அவ்வை நடராசனார்

– ஸ்ரீராம் சர்மா

அன்றந்த அவ்வை

தாயொடு அறுசுவை போம்; தந்தையொடு கல்விபோம்' எனத் தொடங்குமொரு வெண்பாவினைப் பாடி வைத்தாள்.

ஐயா, உம்மொடு எம் தமிழ் போமோ? என இலக்கிய உலகம் அலறும்படியாக விடை கொண்டு விட்டார் என் தந்தைக்கினிய அவ்வை நடராசனார்.

நெஞ்சகத்துள் ஊறி ஊன்றிப் பார்க்கிறேன் அந்தப் பெருந்தகையை..

அது, ஒரு தைப் பொங்கல் நாள் நடுப்பகல் நேரம் திருவல்லிக்கேணி பெசன்ட் ரோடு வீட்டில் என் தந்தையைக் காண தகவுடைய அவ்வை நடராசனார் கனிகள் அடங்கிய சிறு சாக்குப் பையோடு வந்தார். அவரோடு மரியாதைக்குரிய சிலம்பொலி செல்லப்பனாரும் வருகை தந்தார்

இருவரையும் கண்டு குஷியாகிப் போன என் தகப்பனார் ரேடியோவை அணைத்துவிட்டு அவர்களைக் கட்டித்தழுவிக் கொண்டார். பகல் இளைக்க இளைக்க மூவரும் பசி காணாது பேசிக் கொண்டிருந்தார்கள்.

பொங்கல் காலத்தில்தான் சென்னையில் கிரிக்கெட் மேட்ச் நடக்கும். அதன் வர்ணனை வானொலியில் வரும் கிரிக்கெட் ஸ்கோர் கேட்க விடாமல் தொணதொணத்துக் கொண்டிருக்கும் மூவரையும் சபித்தபடி சிறுவர்கள் நாங்கள் வாசல் கடந்து போனோம் அந்த நாளில்.

பின்னொரு நாளில் புத்தி தெளிந்த இளமைக் காலத்தில் அதே அவ்வை பெருமகனாரின் மேடைப் பேச்சினைக் கேட்ட தருணம் கடவுளே கடவுளே. இவரையா அன்று பழித்தோம் என படபடவென கன்னத்தில் போட்டுக் கொண்டேன்.

அய்யகோ என்னவோர் நா அந்த நா !

அது பொழியும் வள்ளுவனை – கம்பனை மேலுமெழுந்தார்த்துப் பொழியும் புறநானூற்றை அகநானூற்றை!

ஆணிவேர் கொண்ட அந்த நா சிலம்பு – மணிமேகலை – தனிப்பாடல் திரட்டு என சங்கத்தமிழின் மொத்த சாற்றையும் தன்னியல்பாக விசிறியடிக்கும். அது பரம்பரைத் தாக்கம்!

கேட்டு கொண்டே இருக்கலாம் அவ்வைப் பெருமகனார் தமிழ் பேசினால்.

மூக்குக்கும் மேலுதட்டுக்கும் இடையே அகண்ட இடைவெளி கொண்ட படர்ந்த முகம் எங்கள் அவ்வை நடராசனாருக்கான அடையாளம். பொதுவாக அதனை சிம்ம முகம் என்பார்கள் எனினும், அவர் அடுத்தவர் நடுங்க கர்ஜனை செய்து நாங்கள் கண்டதே இல்லை.

எதிரிக்கும் இதம் காட்டும் பண்புள்ளமும் நா நயமும் கொண்ட நல்லறிஞர் எங்கள் அவ்வை நடராசனார் !!

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*





# புகழ் வணக்கம்

பொற்சபை புகுந்தாரே அவ்வை நடராசனார் . . .

அவரது காலத்தில் அரசாங்கங்கள் அனைத்தும் அவரை பெரும் பதவிகளில் அமர வைத்துப் பலன் கண்டது. ஆட்சியாளர்கள் அனைவராலும் அவர் காதலிக்கப்பட்டார். காரணம். பண்பே வடிவான அவரது குணநலம் எளிமையாம் தன்மை.

கோட்டையில் பணி முடித்து வெளிப்படும் அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்ல அரசாங்க கார் இருந்தாலும் திடீரென பல்லவன் பேருந்தில் ஏறிக் கொள்வாராம் கேட்டால், "அட அந்த கார் சில லட்சம் பெறுமானதுதானே? பல லட்சம் பெறுமான இந்த பஸ்ஸில் போவோமே!" என்பாராம்.

பதவி சுகத்தை பெரிதாக எண்ணாத அவரைப் போன்றவரைக் காண்பதரிது,

அவ்வை நடராசனாரின் தன்னம்பிக்கை அலாதியானது. ஒருமுறை பட்டிமன்றக் கோமகன் சாலமன் பாப்பையா அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டவர் எண்பது கடந்த வயதிலும் எகிறி அடித்தார்..

“கேட்டீர்களா, சாலமன் பாப்பையா என் மாணவன் என்கிறார் அது முழுப் பொய் காரணம். நான் வகுப்பெடுத்த காலத்தில் எந்த புத்திசாலி மாணவனும் அங்கிருந்ததில்லை. அதனால்தான் நான்கு ஆண்டுகளோடு அந்தப் பணியை முடித்துக்கொண்டேன்.” என தன்னைத் தாழ்த்திக் கொண்டு விழா நாயகரை உயர்த்தியபடி அரங்கத்தை கலகலக்கச் செய்தார் அந்தப் பெருமகன்!

"இராமனுக்கு உடன் பிறந்தது ஒரு மூவர் அவன் கானகம் போந்ததால் வாய்ந்தது இரு மூவர்.– என இராமகாதையின் அரசியல் சூட்சுமத்தை இலக்கிய நயத்தோடு நுணுக்கமாய் எடுத்துரைத்த பேரறிவாளர் எம் அவ்வை நடராசனார்

முதல் தலைமுறையில் படித்து வருபவர்களை முடிமேல் சுமந்து உயர்த்த வேண்டும் என்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும் என முததமிழறிஞர் கலைஞர் என்னிடத்தில் வலியுறுத்திச் சொன்னதை என் வாழ்நாள் தோறும் கடைப்பிடிக்க கடமைப்பட்டவன் நான் என நெக்குருகியபடிச் சொன்னவர் அதன் வழியே நின்றும் காட்டினார்!"

ஒருமுறை அரசாங்கப் பணியில் அவர் இருந்தபோது வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர்கள் சிலரை காரில் ஏற்றிக் கொண்டு கோட்டைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

அண்ணாசாலையைக் கடக்கும்போது பார்த்தீர்களா. இதுதான் இந்த நாட்டை ஆளும் கட்சியின் தலைமையகம். அதற்குப் பெயர் அறிவாலயம். சொல்லுங்கள் உலகத்தில் எந்த நாட்டிலாவது ஒரு கட்சியின் அலுவலகம் ‘அறிவாலயம்' என்ற பெயரை கொண்டுள்ளதா? ஆம், அறிவுதான் இந்த மண்ணின் தேடல் அதுதான் எங்கள் தாகம்:* என அவ்வை நடராசனார் சொல்லச் சொல்ல அயலர் திகைத்து வணங்கி வாழ்த்தினராம்.

*தொடர்ச்சி அடுத்த பக்கம் . . . .*





# புகழ் வணக்கம்

பொற்சபை புகுந்தாரே அவ்வை நடராசனார் . . .

ஐயகோ, அந்த அறிவு ஜோதி அணைந்தேவிட்டது. இலக்கிய உலகின் ஞானப் பெட்டகம் ஒன்று தமிழ் மண்ணில் இருந்து அநியாயமாகப் பிடுங்கப்பட்டு விட்டது. ஞாயிறு கடந்த அந்த திங்கள் நாளில் எங்கள் திராவிடச் சூரியன் ஒன்று மேற்கு திசைக்குள் நிரந்தரமாக பாய்ந்தே விட்டது.

தாயினும் பரிந்து பேசும் அந்தப் பெருந்தகையை பேரறிலாளரை இலக்கியக் கடலை – பண்பே உருவான என் தகப்பனையொத்த அந்தத் திருவுருவைப் பாழுங் கண்ணாடிப் பேழைக்குள் காணுகையில் நெஞ்சடைத்துப் போனது.

அருகே அவரை அப்படியே அச்சடித்தாற்போல குழைந்து நின்றிருந்தார் அண்ணன் அருள். அவர் முகம் நோக்க அஞ்சியவன் அவரது கரத்தை அழுந்தப் பற்றிக் கொண்டு கண்ணாடிக்குள் எட்டி நோக்கினேன். ஆங்கே அந்தப் பேரறிவு சிவமாகிக் கனிந்து உறைந்திருக்கக் கண்டேன்.

சிவோஹம் சிவோஹம் என பொது வெளியில் முதன் முறையாக வாய் விட்டு மெல்லக் கதறினேன்.

கூற்றே, தொல்விதியே, கோச்சடைப் பெருந்தேவே உன் வேட்கை மனம் அடங்கலையோ? திராவிடத் திருமண்ணின் இலக்கிய செல்வங்களை இன்னமும் திருடுவையோ? அது நீதமோ பிடிவாதமோ எனவெல்லாம் மனதுக்குள் புலம்பியபடி தமிழ் இலக்கியப் போறிவை தன்னுள் அடக்கி வைத்திருந்த அந்தப் பேழையை கரம் கூப்பி சுற்றி வந்து சிரம் தாழ்த்தி திரும்பினேன், அன்றொரு நாளில் ஆதி சங்கரர் – வேள்வி மதங்களை மறுத்ததொரு சித்த நிலையில் நின்று – சமஸ்கிருத மொழியில் இப்படியாகப் பாடினார்.

ந ச ப்ராண சங்க்யோ; ந வை பஞ்சவாயு;

ந வாக் சப்த தாதூர்; ந வா பஞ்ச கோச்;

ந வாக் பாணி பாதம்; ந சோப ஸ்தபாயு;

சிதானந்த ரூபம், சிவோஹம்! சிவோஹம்!!

அதன் பொருள்:

நீ காணும் நான் ஆகப்பட்டவன் வேறானவன், நாளெல்லாம் ஓயாது உள் இழுத்து விடும் மூச்சுக் காற்றுக்கும் – உதிரம், எலும்பு சதை சுக்கிலம் உள்ளிட்ட ஏழு தாதுக்களுக்கும் – அன்னம், மனம், ஆனந்தம், விஞ்ஞானம் போன்ற எந்த இழவுக்கும் இனி நான் அடிமைப்பட்டவன் அல்லன். கேள். நீ காணும் இந்த கைகளும், கால்களும் கூட நானல்ல. நான் சிவரூபமாகி விட்டவன் ஆம், எல்லாம் சிவமயம்! எல்லாம் சிவமயம்!!

அவ்வை நடராசனார் ஆனந்த பொற்சபைக்குள் புகுந்தே விட்டார்

ஓம் சிவோஹம்!!

